# போராட்டம்

2014 ஆகஸ்ட்    இதழ் 14    இப்பத்திரிகை மக்கள் போராட்ட இயக்கத்தின் வெளியீடு    20.00 ரூபா

# முதலாளித்துவ அதிகார மாற்றத்திற்கு பதிலாக இடதுசாரிய மாற்றீடு!

**நாட்டில் ஜனநாயகம் சீரழிந்து சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கிறது. இனவாதமும் மதவாதமும் அரசாங்கத்தின் அனுக்கிரகத்தோடு தனது கோர முகத்தை காட்டி மக்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் நிலையில் அடிமட்ட வர்க்கம் பொருளாதார அழுத்தங்களினால் திக்கு தெரியாமல் தடுமாறுகிறது. இந்த நிலைமையை பயன்படுத்தி ஒரு சர்வாதிகாரியை மாற்றி இன்னொரு சர்வாதிகாரியை ஆட்சிபீடத்தில் அமர வைக்கும் முயற்சியில் முதலாளித்துவ சர்வாதிகாரத்தின் எடுபிடிகள் டுபட்டுள்ளனர்.**

ஆகவே அப்படியான முயற்சியை தோற்கடிக்க வேண்டுமென முன்னிலை சோஷலிஸக் கட்சி கூறுகிறது. மக்கள் மத்தியில் தோன்றியுள்ள வெறுப்பு மற்றும் ஜனநாயகம் உரிமைகள் சம்பந்தமான எதிர்ப்பார்ப்பு போன்றவற்றை முதலாளித்துவ கோஷ்டிகளுக்கிடையிலான அதிகார மாற்றத்திற்காக கையாளும் திட்டத்தை தோற்கடிப்பதற்கு இடதுசாரிய மாற்றீடுக்கான கருத்தை மக்கள் மத்தியில் பலப்படுத்தும் நோக்கத்தோடு, அதற்காக ஒரு எல்லைக்குள்ளாவது இணக்கம் தெரிவிக்கும் அனைத்து சக்திகளுடனும் சேர்ந்து பொது வேலைத்திட்டமொன்றை தயாரிக்கும் விடயத்தில் முன்னிலை சோஷலிஸ க் கட்சியின் கவனம் திரும்பியுள்ளது மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கெதிராக உருவாகி வரும் மக்கள் கருத்தை நவ தாராளமய முதலாளித்துவத்தின் பாதுகாவலர்களான ஐக்கிய தேசியக் கட்சியை அதிகாரத்திற்கு கொண்டுவரும் திட்டத்தோடு பிணைப்பதற்கு மேற்கொள்ளும் முயற்சியை தோற்கடித்து, மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் கையாளும் சமூக- அரசியல்- பொருளாதார தந்திரோபாயங்களை தோற்கடிக்கும் மக்கள் செயற்பாடாக அதனை மாற்றுவதே இதன் நோக்கமாகும். இது விடயத்தில் பல்வேறு தரப்புகளுடனான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக முன்னிலை சேஷலிஸக் கட்சி தெரிவிக்கிறது.

## பாலஸ்தீனத்தை வாழவிடு!




புாலஸ்தீனத்தின்மீது தொடுக்கப்படும் மிலேச்சத்தனமான தாக்குதல்களை உடன் நிறுத்துமாறு வற்புறுத்தியும், ஏகாதிபத்திய யுத்தத்திற்கு எதிராக இஸ்ரவேல் - பாலஸ்தீன ஒடுக்கப்பட்ட மக்களின் ஒற்றுமையை கட்டியெழுப்புமாறும் கோரி இடதுசாரி அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், மாணவர் அமைப்புக்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் சிவில் அமைப்புகள் கலந்து கொண்ட பாரிய ஆர்ப்பாட்டம் ஜூலை 31ம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு கோட்டை ரயில் நிலையம் முன்பாக நடந்தது பெருமளவில் மக்கள் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டம் "பாலஸ்தீனத்தை வாழவிடு" என்ற கோஷத்தை மையமாக வைத்து நடத்தப்பட்டது. இலங்கையின் இடதுசாரி கட்சிகளான முன்னிலை சோஷ லிஸக் கட்சி, நவ சமசமாஜக் கட்சி, ஐக்கிய சோஷலிஸக் கட்சி, சோஷலிஸக் கட்சி, இலங்கை மாவோவாதக் கட்சி, கம்யூனிஸக் கட்சி, புதிய ஜனநாயக மாக்ஸ் லெனின்வாதக் கட்சி ஆகிய அரசியல் கட்சிகளும் இடதுசாரிய அமைப்புகளும் பங்கேற்றிருந்தன. இங்கு காணப்படுவது ஆர்ப்பாட்டத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படமாகும்.

## இனவாதத்தலிற்கு- மதவாதத்திற்கு-குலவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் மேலும் முன்னெடுப்பு!

"இனவாதத்திற்கு மதவாதத்திற்கு குலவாதத்திற்கு எதிரான நாங்கள் மனிதர்கள்" என்ற தொனிப்பொருளில் மேற்கொண்ட பரப்புரை" ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளை எதிர்காலத்தில் நாடு பூராவும் விஸ்தரிக்க சம உரிமை இயக்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது, அதன் முதற்கட்டம் ஜூலை 15ம் திகதி கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடந்தேறியது. இனவாதத்திற்கு எதிராக மக்கள் ஒப்பத்தை பெறல், துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல், மக்களை அறிவுறுத்தல், புகைப்படக் காட்சி - இசை நிகழ்ச்சி உள்ளிட்ட கலாச்சார நடவடிக்கைகள் ஆகியவற்றை கொண்ட நிகழ்ச்சிகளை பல்வேறு பிரதேசங்களில் நடத்த சம உரிமை இயக்கம் ஏற்பாடு செய்து வருவதாக அதன் ஒருங்கிணைப்பாளர் தோழர் ரவீந்திர முதலிகே குறிப்பிட்டார்.

## விதைகள், நீர், நிலம் விற்பனைப் பண்டமாக்குவதை எதிர்த்து விவசாயிகள் மத்தியில் தெழிவுபடுத்தல்!

உத்தேச நவ தாராளமய மறுசீரமைப்பின் வாயிலாக விதைகள், நீர், நிலம் மற்றும் ஏனைய விவசாய பயனீட்டுத் துறைகளை தனியாரிடம் ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகள் துரிதமாக செயற்பட்டு வருவதாகத் தெரிகிறது. இதனால் விவசாயியும், விவசாய உற்பத்திகளை விலைக்கு வாங்கும் நுகர்வாளனும் சுரண்டப்படும் நிலை உருவாகியிருக்கின்றது. இது குறித்து எதிகாலத்தில் விவசாயிகளுடன் பேச்சுக்கள் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. விவசாய போராட்ட இயக்கத்தின் மூலம் நடத்தப்படும் இக்கூட்டத் தொடரின் முதற்கட்டம் ஜூலை 22ம் திகதி தெஹிஅத்தகண்டியவில் தொடங்கவிருக்கிறது. விஷேடமாக உத்தேச புதிய விதைகள் சட்டமூலம், தண்ணீரை தனியாரிடம் ஒப்படைப்பது சம்பந்தமாக கொண்டுவரப்படும் சட்ட திட்டங்கள் மற்றும் விவசாய நிலங்கள் சம்பந்தமான பிரச்சினைகள் இதன்போது கவனத்தில் எடுக்கப்படும். இவ்வாறான கூட்டங்களை ஏனைய பிரதேசங்களிலும் நடத்த வேண்டுமென்ற விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று அதன்படி பல்வேறு பிரதேசங்களில் விவசாயிகளை சந்தித்து இது குறித்து கலந்துரையாடவிருப்பதாக விவசாய போராட்ட இயக்கம் கூறுகிறது.

# பொது ஊழியர் போராட்டதின் மூலம் உரிமைகளை வென்றெடுப்போம்

## சுகாதார சேவையாளர் மத்திய நிலையம்

குடும்ப சுகாதார சேவை, தாதியர் மற்றும் வைத்திய சேவையை பிரிதிநிதித்துவம் செய்யும் சில தொழிற்சங்கங்கள் குறுகிய வர்க்கபேத கோரிக்கைகளை முன்வைத்து ஒருவருக்கொருவர் யுத்தப் பிரகடனம் செய்துள்ளன. அவர்களால் மேற்கொள்ளப்படும் தொழிற்சங்க நடவடிக்கைகள் ஒட்டுமொத்த சுகாதார சேவை மற்றும் தொழிலாளர் விடயத்தில் மக்கள் எதிர்ப்பை உருவாக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. இலவச சுகாதார சேவையை தனியார் மயப்படுத்தும் அரசாங்கத்தினதும் ஆளும் வர்க்கத்தினதும் பொருளாதார மற்றும் அரசியல் தேவையை அது நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. அரசாங்கமும், சுகாதார அமைச்சின் அதிகாரிகளும் மேற்படி தொழிற் சங்க தலைவர்களும் வட்டமேசை மாநாடுகளை நடத்தி நெருக்கடியை நீடிக்க விட்டு பார்த்துக் கொண்டிருப்பது அதனால்தான். ஆகவே, தரபேதத்தை தூண்டும் இந்த குறுகிய நோக்குடைய தொழிற்சங்க நடவடிக்கையை தயங்காது புறககணிக்குமாறும், அதற்காக துணிந்து செயற்பட முன்வருமாறும் ஒட்டுமொத்த சுகாதார அலுவலர்களிடமும் வேண்டிக் கொள்கின்றோம்.

நவ தாராளமய முதலாளித்துவம் அல்லது திறந்த பொருளாதாரம் இலங்கையில் செயற்பட தொடங்கிய நாள் தொட்டு அரச நலன்புரி சேவைகளாக இருந்த கல்வி மற்றும் சுகாதார சேவைகள் வெட்டப்பட்டு அவற்றை வர்த்தக பண்டமாக்கும் நடவடிக்கைகள் செயற்பட தொடங்கின. அதன்படி தனியார் வைத்தியசாலைகள், வைத்திய ஆலோசனை நிலையங்கள, டிஸ்பன்ஸரி, வைத்திய இரசாயணகூடங்கள், மருந்தகங்கள் மற்றும் அவற்றுக்குத் தேவையான ஊழியர்களை உருவாக்கும் நோக்கில் இலவச கல்விக்குப் பதிலாக தனியார் மருத்துவக் கல்லூரிகள், தனியார் தாதியர் பயிற்சி பாடத்திட்டங்கள், மருந்தாளர் பாடத்திட்டங்கள் மற்றும் பட்டப்படிப்பு கடைகள் உருவாகத் தொடங்கின. அதன் வாயிலாக தனியார் துறையின் வைத்திய சேவையை உயர்த்தவும், அரசத் துறை சம்பந்தமான மக்கள் நம்பிக்கை சிதைக்கப்பட்டு அதன் நிர்வாகமும் வசதிகளும் சீர்குலைக்கப்பட்டு வருகின்றன.நோய் நிவாரணம் பெயரளவில் இருப்பதனால், பிரதான வைத்தியசாலைகளுக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. சிறுநீரக நோயாளர்களின் பிரச்சினைகள் போன்றவற்றுக்கு நோயாளர்கள் முகம் கொடுத்து வருகின்றனர்.

இதில் முக்கியமான பிரச்சினை என்னவெனில், தொழிற்சங்கத் தலைவர்கள் பொதுவில் மனித சமூகம் எதிர் கொண்டுள்ள இப்பரிதாப நிலையை அறிந்தும் அறியாதவர்கள் போல் செயற்படுவதுதான்.

இந்நெருக்கடியை எதிர் கொள்வதற்கும் தமது உரிமைகளை பாதுகாக்கவும் நோயாளர்கள் எதிர் கொண்டுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் ஒட்டு மொத்த ஊழியர்களும் பொது போராட்டமொன்றுக்கு வருமாறு ஒட்டுமொத்த முற்போக்கு சுகாதார அலுவலர்களிடமும் நாம் இறுதியாகக் கேட்டுக் கொள்கின்றோம். பேதமின்றி, ஒற்றுமையாக அந்தக் கோரிக்கையையம், சுதந்திர சுகாதார சேவை வெட்டப்படுவதனால் துன்பத்திற்குள்ளாகும் ஊழியர்களின் பொது கோரிக்கைகளையும் இணைத்த ஒட்டுமொத்த சுகாதார அலுவலர்களும் பொது மக்களும் இணைந்த போராட்டத்தின் மூலம் மட்டுமே சுகாதார அலுவலர்களின் உரிமைகளை பெற்றுக் கொள்ள முடியும். அதற்காக அணிதிரளுமாறும் அனைத்து சுகாதார ஊழியர்களையும் கேட்டுக் கொள்கின்றோம்.

# முன்னிலை சோஷலிஸக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கை:

## இனவாதத்திற்கு எதிரான சமாதான சைக்கிள் சவாரியின் மீதான தாக்குதலை வன்மையாக கண்டிப்போம்!

ஐக்கிய சோஷலிஸக் கட்சி ஜுலை 26ம் திகதி ஏற்பாடு செய்திருந்த சமாதானத்திற்கான சைக்கிள் சவாரியின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலை வன்மையாக கண்டிக்கின்றோம். சமாதானத்திற்கான சைக்கிள் சவாரி நாரஹேன்பிட்டியிலிருந்து அளுத்கமை வரை செல்லும் வழியில் இத்தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது. இனவாதத்திற்கும் மதவாதத்திற்கும் எதிரான அமைதிக்கும் ஒற்றுமைக்குமான ஐக்கியமே என்ற தொனிப்பொருளிலேயே இந்நடைப்பயணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இத்தாக்குதலோடு சம்பந்தப்பட்ட எவருமே இதுவரை கைது செய்யப்படாமை, காடையர்களை கட்டுப்படுத்தத் தவறிய பொலிஸ ார் இந்நடைப் பயணத்தை தடுக்க முயன்றமை ஆகியவற்றை பார்க்கும்போது இதன் பின்னணியில் அரசியல் சக்தியொன்று செயற்படுவது தெரிகிறது. இந்த அரசியல் சக்தி கடந்த ஜுன் 15ம் திகதி அளுத்கம முஸ்லிம்களுக்கு எதிராக தூண்டப்பட்ட வன்முறையை நிர்மாணித்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை. இனவாதம் மற்றும் மதவாதத்தின் ஊடாக உயிர்களையும் உடைமைகளையும் அழிப்பவர்களுக்கு எதிராக அல்லாது அதற்கெதிரான கருத்தை கொண்டிருப்பவர்களுக்கு கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் நடந்த சில சம்பவங்கள் இதனை ஊர்ஜிதப்படுத்துகின்றன. ஜுலை 23ம் திகதி மீண்டுமொரு கறுப்பு ஜுலை வேண்டாம் என்ற தொனிப்பொருளில் சம உரிமை இயக்கம் நாட்டின் பல பிரதேசங்களில் நடத்திய பதாகையில் கையொப்பம் பெறும் நடவடிக்கையை சீர்குலைப்பதற்கு பொலிஸார் பொய் காரணங்களை முன்வைத்தனர். இனவாதத்திற்கெதிரான கருத்து சமூகமயப்படுவதனை தடுப்பதற்காக இனவாத மற்றும் மதவாதக் கருத்துக்களை பரவலாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நவ தாராளமய முதலாளித்துவத்தின் பாதையில் செல்லும் பின்தங்கிய நாடொன்றின் ஆட்சியாளர்களுக்கு இனவாதமும் மதவாதமும் தவிர மீள்வதற்கு வேறு வழி கிடையாது என்பதற்கு இவை சிறந்த உதாரணங்களாகும்.

இலங்கையில் சிங்கள, தமிழ், முஸ்லிம் ஒடுக்கப்பட்ட மக்களது விடுதலைக்கான பயணத்தில் இனவாதமும் மதவாதமும் தடைகற்களாக உள்ளன. அந்த தடைகளை தகர்த்தெறியாது உண்மையான விடுதலைப் பாதையை கண்டுபிடிக்க முடியாதது மாத்திரமல்ல. அந்தத் தடைகள் ஆட்சியாளர்களால் மேலும் அதிகரிக்கப்படுவதோடு மக்களும் ஒரே பொறியில் மீண்டும் மீண்டும் சிக்கிக் கொள்கிறார்கள். இந்த நிலைமையை மாற்றுவதற்கான பொறுப்பு ஐக்கிய சோஷலிஸ க் கட்சிக்கு மாத்திரமல்ல அனைத்து இடதுசாரிய முற்போக்குவாதிகளுக்கும் ஜனநாயகவாதிகளுக்கும் இருக்கிறது. இந்நிலைமையை மாற்றுவதற்கான பொறுப்பு இலங்கை மக்கள் அனைவர் மீதும் இருப்பதாக நாங்கள் நம்புகிறோம். .இனவாதிகளின் வன்முறைகளை விட அதிக பாதிப்பை ஏற்படுத்துவது இனவாதத்திற்கு எதிரான முற்போக்கானவர்களின் மௌனம்தான். ஆகவே, இந்நிலைமையை மாற்றுவதற்கு மக்களின் நேரடியான பங்களிப்பை எதிர்பார்ப்பதோடு இத்தாக்குதல்களின் பின்னால் உள்ள நாற்றமடிக்கும் அரசியலை தோற்கடிக்குமாறும் நாம் இலங்கை மக்களிடம் கேட்டுக் கொள்கிறோம்.

3ஆம் பக்கம்

### நத்தார் தாத்தாக்கள் வரிசையாக வருகிறார்கள்!

யுத்தத்தின்போது தமது பக்கத்தால் யுத்தக் குற்றங்கள் நடந்திருக்கும் பட்சத்தில் அது குறித்து வெளிப்படையாக விசாரணை செய்து தனது தவறுகளை அரசாங்கம் திருத்திக் கொள்ளும் என்று நாங்கள் நம்பவில்லை. அரசாங்கம் எடுத்திருக்கும் இநடவடிக்கை கூட சர்வதேச அழுத்தத்திலிருந்து தப்பிப்பதற்கான தந்திரோபாயம்தான். தந்திரோபாயம் ஓரளவு முன்னேற்றமானது என்பதில் சந்தேகம் கிடையாது. தந்திரோபாயத்தின் ஆரம்பக் கட்டத்திலேயே இந்தியா போன்ற நாடுகளின் பிரதிபலிப்பு அதற்கான ஒரு சமிக்ஞைதான். அரசாங்கம் தன்னை காப்பாற்றிக் கொள்ள அடித்த பல்டியோடு வடக்கு தமிழ் மக்களின் வாழ்க்கையில் ஓரளவு நியாயம் கிடைத்தாலும், யுத்தத்தினால் இறந்த மக்களுக்கு நீதி கிடைக்குமா என்று கூறுவதற்கு இன்னும் காலம் கனியவில்லை. அரசாங்கத்தின் இந்த பல்டிக்கு வடக்கு மக்களின் பிரதிபலிப்பு எப்படியிருக்கும் என்பதை பொறுத்துதான் அதனை முடிவு செய்ய முடியும். எப்படியிருந்தாலும், தேசிய பிரச்சினை சம்பந்தமான திருப்பம் கூட நத்தார் தாத்தா பாத்திரத்தின் இன்னொரு காட்சியாக மாறவும் இடமிருக்கிறது. இப்போது வித்தை காட்டும் காலமாக இருப்பதால், வித்தைகளை கவனமாக அவதானிக்க மட்டுமே முடியும்.


இந்த மாயாஜால வித்தைகளினால் ரொட்டியை புறாவாக மாற்ற முடிவதோடு. புறாவை முயலாகவும் மாற்ற முடியும். முயலை தொப்பிக்குள் போட்ட பின்னர் பல வண்ண கைக்குட்டையாக அது மாறும். இந்த கண்கட்டி வித்தைகளில் மயங்கி ஒட்டுமொத்த சமூகமும் அதள பாதாளத்தில் விழுவதை தடுக்கும் ஆற்றல் ஒடுக்கப்பட்ட மக்களிடமே உள்ளது. சமூகத்தின் அடி மட்ட வர்க்கத்திடமே உள்ளது. நாம் முன்னமே கூறியதைப் போன்று அன்றாட வாழ்க்கையை நடத்திச் செல்வதற்குக் கூட போதுமான வருமானமில்லாத மக்களிடமே உள்ளது. வாழ்வதற்காக ஒரு குடும்பத்திற்கு மாதத்திற்கு 50,792 ரூபாய் வருமானம் தேவையென மத்திய வங்கி கூறும்போது, அந்தளவு வருமானத்தை பெற முடியாத பெரும்பாலான மக்களிடம்தான் அதற்கான ஆற்றல் உள்ளது. அந்த வர்க்கம் மௌனமாக இருப்பதும், செயற்படாதிருப்பதும் தான் பிரச்சினை. செயற்படாதிருப்பதற்கான காரணம் என்ன? இனவாத, மதவாத தூண்டுதல்களால் அவர்களை செயற்படாமற் செய்திருப்பதுதான். மறு பக்கம் மஹிந்த ராஜபக்ஷவின் முன்னாலும், ஆட்சியாளர்களின் முன்னாலும் மண்டியிடும் அடிவருடிகளான நபர்களைத்தான் இவ்வர்க்கத்தின் பிரதிநிதிகளாக தெரிவு செய்திருக்கிறார்கள். இந்த நிலையில் ஆட்சியாளர்களின் மாயாஜால வித்தைகளின் முன்னால் போர்க்குணம் கொண்ட மக்களும் பார்வையாளர்களாக இருப்பது புதுமையல்ல.

இவ்வாறான அரசியல் வேகமாக வியாபித்து வருகிறது. எதைப்பற்றியும் எதிர்வு கூற முடியாத நிலை எங்களுக் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் எதுவும் நடக்கக் கூடும். அல்லது நடக்காமலிருக்கவும் கூடும். நடப்பது என்ன? நடக்கப் போவது என்ன? என்பதைப் பற்றிய தீர்மானம் நாம் முன்னமே கூறிய அடி வர்க்க மக்களின் ஒற்றுமையிலேயே தங்கியுள்ளது. அந்த சக்திகளின் பலத்தை அதிகரித்து இடதுசாரிய போராட்ட வழிமுறையை ஈர்த்துக் கொள்ளச் செய்வதன் ஊடாகவே வரலாற்றை மாற்ற முடியும். நத்தார் தாத்தாக்களின் மாதிரியான அரசியலுக்கு எந்நாளும் ஏமாறும் வெட்கம் கெட்ட தலைவிதியை மாற்றுவதற்கு இதைத் தவிர மாற்று வழி கிடையாது.

# நத்தார் தாத்தாக்கள் வரிசையாக வருகிறார்கள்!







நத்தார் தாத்தா பாத்திரத்தில் வரிசையாக வருகிறார்கள் என்ற தலைப்புச் செய்தி உங்களை ஆச்சரியப்படவைக்கக் கூடும். நத்தாருக்கு இன்னும் 5 மாதங்கள் இருக்கின்றன. என்றாலும் நத்தார் தாத்தாவை காண வேண்டுமெனில் நீங்கள் ஊவா மாகாணத்திற்கு வரவேண்டும். அல்லது தினசரி பத்திரிகைகளையோ, இலத்திரனியல் ஊடகங்களில் ஒலிபரப்பப்படும் செய்திகளையோ நன்றாக அவதானிக்க வேண்டும். ஊவா மாகாண சபைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்ட கையோடு மிக விரைவில் ஜனாதிபதி தேர்தலும் வரக்கூடுமென்ற வதந்தியால் நத்தார் தாத்தா பாத்திரத்தில் வரிசையாக வந்து கொண்டிருக்கிறார்கள். மாகாண சபை தேர்தலில் வெற்றி பெறுவதற்காக பல பரிசுப் பொருட்களை எடுத்துக் கொண்டு அரசாங்கத்தினதும் எதிர் கட்சியினதும் நத்தார் தாத்தாக்கள் ஊவா மாகாணத்திற்கு படையெடுத்துள்ளார்கள். இந்நிலையில் கடந்த இரு வாரங்களாக நடந்த சில விடயங்கள் தேர்தலோடு சம்பந்தப்பட்டிருப்பது தெரிகிறது.

அவ்வாறான சில சம்பவங்களைப் பற்றி பார்ப்போம். இவற்றில் முக்கியமான விடயம் என்னவெனில், இலங்கையின் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான விசாரணைக்கு சர்வதேச நிபுணர்களை இணைத்துக் கொள்ள அரசாங்கம் எடுத்த முடிவுதான்.

வரி விதிப்புக்கள் மூலம் அரசாங்கம் தனது விளையாட்டை ஆரம்பித்துள்ளது. அரச மற்றும் தனியார் துறையின் வங்கி ஊழியர்கள் பெற்றுக் கொள்ளும் கடனுக்காக குறைந்த வீத வட்டியே அறவிடப்படுகிறது. ஜூலை 9ம் திகதி வெளியிடப்பட்ட இல: 1857/8 அதி விசேட வர்த்தமானி அறிக்கையின்படி அந்த குறைந்த வீத வட்டிக்கு வரி அறவிட ஆலோசிக்கப்பட்டுள்ளது. சில ஊழியர்கள் தமது சம்பளத்தில் 60 வீதத்தை கடன் தவணையாக செலுத்துவதோடு, எஞ்சிய 40 வீதத்தால் தமது வாழ்க்கையை ஓட்டுகின்றனர். இவ்வாறு வரி அறவிடப்படுவதனால் அவர்களது வாழ்க்கை நெருக்கடியில் தள்ளப்படலாம். தவிரவும் 50,000 ரூபாவுக்கு மேல் மாதச் சம்பளம் பெறுபவர்களிடமிருந்து உழைக்கும்போதே வரி அறவிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. மாதச் சம்பளம் 50,000 லிருந்து 3 லட்சம் வரை வருமானம் பெறுபவர்கள் மீது இதன்படி பல விகிதாசாரங்களில் வரி அறவிடப்படும். இந்நிலைமையில் 38 தரங்களை சேர்ந்தவர்கள் ஒன்றிணைந்து அதனை எதிர்த்ததனால் ஜனாதிபதி தலையிட்டு அவ்வரியை ரத்துச் செய்தார். ஒரு வர்த்தமானி அறிவித்தலை வாய்ச் சொல்லால் இரத்துச் செய்ய முடியாது. ஆகவே அதற்காக இன்னொரு வர்த்தமானி அறிவித்தல் அவசியமாகிறது. எனவே மேற்படி வரி இரத்து செய்யப்பட்டமை மோசடியாகும் என்ற கருத்தும் நிலவுகிறது. தேர்தலை மனதில் வைத்தே அரசாங்கம் இப்படியான நடவடிக்கையை எடுத்திருப்பது வெளிப்படை. ஆனால், நாட்டு மக்கள் தெளுாகையில் 28000 பேருக்கு ஏற்பட்ட பிரச்சினைக்கு மாத்திரம் அரசாங்கம் இந்தளவு கரிசனை காட்டியது ஏன் என்ற கேள்வி எழுகிறது. தேர்தல்களின்போது அரசாங்கத்தின் கருத்தியல் இயந்திரம் சிறு முதலாளித்துவ பிரிவுகளின் மீது குறிப்பிட்ட தூரத்திற்கு தங்கியிருக்கின்றது. ஆகவே எண்ணிக்கையை விட அந்த பிரிவுகளின் நல்லெண்ணத்தை வென்று கொள்வது ஜனாதிபதியை பொறுத்தவரை முக்கியமாகப்படலாம்.

> **“ எனவே மேற்படி வரி இரத்து செய்யப்பட்டமை மோசடியாகும் என்ற கருத்தும் நிலவுகிறது. தேர்தலை மனதில் வைத்தே அரசாங்கம் இப்படியான நடவடிக்கையை எடுத்திருப்பது வெளிப்படை. ”**

தேர்தலை இலக்காகக் கொண்டு வரி விதித்தலை இரத்து செய்தாலும், தேர்தலை இலக்காக வைத்து வரி அறவிடுவதும் நடந்திருக்கிறது. கடந்த ஜூலை 16ம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் விதத்தில் இறக்குமதி சீனிக்கான வரி 25 லிருந்து 30 ரூபாய் வரை 3 ரூபாயால் அதிகரிப்பதற்கு நிதியமைச்சு தீர்மானித்துள்ளது. இத்தீர்மானத்தினால் சீனியின் விலை அதிகரிக்க மாட்டாது என்ற அறிக்கையை வெளியிட்ட நிதியமைச்சு, மொனராகலை பிரதேச கரும்பு செய்கையாளர்களை இலக்காக வைத்தே இம்முடிவை எடுத்துள்ளது. இவ்வாறு வரி உயர்த்துவதனால் கரும்பு செய்கையாளர்களுக்கு எவ்வித பலனும் கிடைக்காவிட்டலும், அது விவசாயிகளின் நன்மைக்காக எடுக்கப்பட்ட முடிவு என அரசாங்கம் பரப்புரை செய்கிறது. மொனராகலை மாவட்ட மக்கள் விடயத்தில் எந்தவித அபிவிருத்தியையும் பெற்றுக் கொடுக்க வக்கற்ற அரசாங்கம் இப்படியான பொய்களை கூறியாவது மக்களின் வாக்குகளை வேட்டையாடும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது. மொனராகலை மாவட்டத்தில் மட்டுமல்ல, முழு நாட்டினதும் நிலை இதுதான். 50,000 மாதச் சம்பளம் பெறும் வங்கி ஊழியர்களினதும், முகாமைத் தரத்திலுள்ள ஊழியர்களினதும் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட போதிலும், 50,000 ரூபாய்க்கும் குறைந்த வருமானத்தை தேடும் பெரும்பாலான மக்களைப் பற்றி எந்தக் கதையும் கிடையாது. இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட புதிய அறிக்கைகளின்படி ஒரு குடும்பத்திற்கான பராமரிப்புச் செலவு 50,000 ரூபாயையும் தாண்டியுள்ளது. அது கூட உயிரை தக்கவைத்து கொள்வதற்கு மட்டுமே. ஆனால் நாட்டின் பெரும்பாலான மக்களுக்கு அந்தளவு வருமானம் கிடைப்பதில்லை. இந்த லட்சணத்தில் கண்கட்டி வித்தையை காட்டுவதைத் தவிர அரசாங்கத்திற்கு வேறு மாற்றுவழி கிடையாது.

ஆங்கிலத்தில் **U-Turn** என்றால் 180 பாகை திரும்புவதாகும். அதற்கு தமிழில் வார்த்தை இல்லாததால் யுத்தக் குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக அரசாங்க கொள்கையின் மாற்றத்தை **U-Turn** என்றே அழைக்க வேண்டியுள்ளது. யுத்தத்தின்போது சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்படவில்லையென இதுவரை கூறிவந்த அரசாங்கம், அவ்வாறு மீறப்பட்டதை ஏற்றுக் கொண்டாலும் கூட அந்தப் பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்கு தமக்கு ஆற்றல் இருப்பதனால் வெளிநாட்டு நிபுணர்களின் தலையீடு அவசியமற்றது என கூறிய அரசாங்கம் திடீரென பல்டியடித்துள்ளது. ஜூலை 15ம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கேற்ப காணாமல் போனவர்கள் குறித்து விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அதிகாரங்கள் யுத்தக் குற்றங்களை விசாரிப்பது வரை விஸ்தரித்துள்ளது. அது மாத்திரமல்ல, அதற்காக வெளிநாட்டு நிபுணர்களை உள்ளடக்கிய ஆலோசனை சபையையும் நியமித்துள்ளது. இது குறித்து அமைச்சர்களிடம் வினவிய போது அவர்கள் இஞ்சி தின்ற குரங்குகளைப் போல் விழித்ததை பார்த்ததும் அமைச்சரவையில் இது குறித்து பேசப்பட்டிருக்கவில்லை என்பது தெரிய வந்தது. இதற்கிடையில் அரசாங்கத்தின் இரு பங்காளிக் கட்சிகள் தமது இணக்கமின்மையை வெளிக்காட்டியிருந்தன. விமல் வீரவன்ச ஜனாதிபதிக்கு எழுதியிருந்த கடிதத்தில் தேசப்பற்றை அரசாங்கம் "நீர்த்துப்போகச் செய்து கொண்டிருப்பதாக"குறிப்பிட்டிருந்ததோடு, ஜாதிக ஹெல உருமைய நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்கவின் ஒப்பத்தோடு வெளியிட்ட ஊடக அறிக்கையில் அரசாங்கம் "சர்வதேச பொறியில்" தானாகவே சிக்கிக் கொள்ளும் ஆபத்து குறித்து சுட்டிக்காட்டியிருந்தது. எது எப்படியிருந்தாலும் இது குறித்து அரசாங்கத்திற்குள் விரிவாக ஆலோசிக்கப்படாமலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பது தெரிகிறது.

02 ஆம் பக்கம் பார்க்க...

# நாங்கள் எல்லோரும் ஒன்றாய் சேர்ந்திருப்பது மிக முக்கியம்!

**பிரான்ஸ் நாட்டிலிருந்து இயங்கிக் கொண்டிருக்கும் இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினரின் செயற்பாட்டாளர் தோழர் தேவதாஸன் அவர்களுடன் போராட்டப் பத்திரிகைக்காக ஒரு சில நிமிடங்கள்.**

*போராட்டம்:- இன்றைய இலங்கை அரசியல் சூழ்நிலைமைகளை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்...?*

*தோழர் தேவதாஸன்:-* பொதுவாக... ஏன் நீண்டகாலமாகவே இலங்கை அரசியல் நல்ல நிலமையில் இருந்ததில்லை. மக்கள் நலன் கருதி எந்தவொரு அரசாங்கமும் இதுவரையும் இருந்ததேயில்லை. மக்களுக்குரிய அடிப்படைப் பிரச்சனைகள் ஒன்றும் இதுவரையிலும் நிறைவேற்றப்படவேயில்லை. மக்களுடைய பொறுப்புணர்வுகள் இதுவரையிலும் அவர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை.

மாறாக மக்கள் மத்தியில் இனவாதங்களை வளர்த்து தமிழ் சிங்கள முஸ்லீம் என்ற பேதங்களை உருவாக்கி அவர்களை இணையவிடாமல் பிரித்து வைத்திருக்கின்ற நிலமையே மேலோங்கியிருக்கிறது.

ஒவ்வொரு இனமக்களின் தேவைகளின் அடிப்படையில் அவர்களின் தனித் தன்மைகளையும் புரிந்து கொண்டு செயற்பட வேண்டியது வரலாற்றுக் கடமை. இவ்வளவு காலமும் மேற்தட்டு வர்க்கத்தினரின் நலன்களையே பாதுகாத்துக் கொண்டிருக்கும் அரசாகவே இலங்கை அரசு இருந்து கொண்டிருக்கின்றது.

இடதுசாரி அமைப்புக்கள் மாத்திரம் தான் மக்களின் நலன்கருதிகளாக அன்றும் இன்றும் குரல்கொடுத்து வந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்று அந்நிய சக்திகளின் ஊடுருவல்களினால் அரசாங்கமானது ஆடிக்கொண்டிருக்கின்றது.

இது தான் இன்றைய இலங்கையின் அரசியல் சூழ்நிலை என்று நான் கருதுகிறேன்.

*போராட்டம்:- இன்றைய காலகட்டத்தில் சமஉரிமை இயக்கத்தின் முக்கியமும் அதன் தேவைகள் பற்றியும்...?*

*தோழர் தேவதாஸன்:-* இன்றைய காலகட்டத்தில் சமஉரிமை இயக்கத்தின் நகர்வுகள் மிக முக்கியமான ஒன்றாகவே நான் கருதுகின்றேன். அத்தோடு இன்றைய காலகட்டத்தில் எல்லோர் மத்தியிலும் இதுவொரு பெரிய சவாலாகவும் இருக்கின்றது. இதைப் பாதுகாத்து வளர்த்தெடுப்பதற்கு மிகுந்த கவனமும் சிரமமும் எடுக்க வேண்டும். தமிழ் சிங்கள முஸ்லீம் என அனைத்து மக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய முக்கிய காலகட்டமுமாகும். எங்களுக்கும் சில விமர்சனங்கள் இருந்தாலும் இன்றைய காலகட்டச் சூழல் கருதி நாங்களும் சேர்ந்து வேலை செய்ய வேண்டிய தேவையிருக்கின்றது.

*போராட்டம்:- நடைபெறப் போகும் ஜனாதிபதி தேர்தலைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்....?*

*தோழர் தேவதாஸன்:-* இன்று மகிந்தாவின் செல்வாக்கை வீழ்த்திவிடும் மாதிரியான சக்திகள் இல்லை என்றே கருதுகின்றேன். தென்னிலங்கையிலும் சரி வேறு பகுதிகளிலும் சரி அவரது செல்வாக்கை முறியடிக்க வேண்டும் என்று பல முயற்சிகள் இருந்தாலும் இது தற்போது சாத்தியமற்றதே.

இன்றைய சர்வதேச சமூகமும் ரணிலைக் கொண்டு வந்து நிறுத்தி ஆட்சியமைப்பை மாற்ற வேண்டும் என்று முயற்சிக்கின்றது. அதிகாரங்கள் மாறலாம் ஆட்சியும் மாறலாம் ஆனால் அடிப்படை நிலமைகளில் மாற்றங்கள் ஏதும் ஏற்படப் போவதில்லை.

புலம்பெயர் மண்ணில் இருக்கின்ற நாடுகடந்த அரசாங்கமும் மற்றைய வேறு தமிழ் அமைப்புக்களும் மகிந்தாவை ஒரு குற்றவாளியாகக் காட்டி ஆட்சியை மாற்ற வேண்டும் என விளைகிறார்களே தவிர அங்கு வாழும் மக்களின் அடிப்படை தேவைகள், தீர்வுகள் தொடர்பாக இவர்கள் சிந்திப்பதில்லை.

என். ரீ. ஓ போன்ற அமைப்புக்களின் வருகைகளினாலும் பல்வேறுபட்ட நிதிநிறுவனங்களின் ஊடுருவல்களும் இருப்பதோடு இலங்கை இன்று சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கிக்கொண்டு இருப்பதால், இந்த ஐரோப்பியச் சமுதாயம் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கக் கூடிய ஒரு அரசியல் அமைப்பு உருவாக வேண்டும் என்பதையே விரும்புகின்றது.

*போராட்டம்:- இலங்கையில் எப்படியான ஒரு அரசியல் அமைப்பு உருவாக வேண்டும் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்......?*

*தோழர் தேவதாஸன்:-* நாங்கள் அந்தக்காலம் தொடக்கம் இந்தக் காலம் வரையும் இந்தத் தமிழ் தேசியத்தை எதிர்த்தே வந்து கொண்டிருக்கின்றோம். சாதிய விடுதலையைத் தராத எந்த விடுதலையும் ஏனைய விடுதலையைத் தரப் போவதில்லை. சேர் பொன் இராமநாதன் தொடக்கம் ஆறுமுகநாவலர் போன்றோர்கள் வரையிலும் தங்களுடைய சுயநலத் தேவைகளின் அடிப்படையிலே இந்தத் தமிழ் தேசியத்தை முன்வைத்து வந்திருக்கிறார்கள்.

கன்ரி பேரின்பநாயகம் போன்றவர்களால் உருவாக்கம் பெற்ற இலங்கை தேசியக்காங்கிரஸ் தமிழ் சிங்கள ஒற்றுமைகளை வலியுறுத்தியிருந்தாலும் அவை வெற்றி பெறமுடியாமல் போய்விட்டது. ராமநாதன் போன்றோரின் செயற்பாடுகளும், சிங்கள முதலாளித்துவத் தலைமைப் பீடங்களினாலும் பிரித்தானியரின் பிரித்தாளும் சூழ்ச்சிகளினாலும் ஒடுக்கப்பட்ட மக்களின் நலன் அடிப்படையில் அரசுகள் அமையவில்லை.


அது தான் சாதிய விடுதலையை முன்னிறுத்தி அரசுகள் அமைய வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். அந்த வகையில் தமிழ் தேசியத்தை முன்னிறுத்தி வரும் எந்த அரசையும் நாம் நம்ப மாட்டோம். அதே போல் தான் இந்த சிங்கள அரசுகளும்.

இன்று இந்தத் தமிழ் தேசிய சுனாமி வந்ததனால் சாதியப் போராட்டம் பற்றிய உணர்வே அழிக்கப்பட்டு விட்டது. கதைக்கக் கூடிய நிலமையே இல்லாமல் போய்விட்டது. இந்தத் தமிழ் தேசியப் போராட்டம் மூலம் சாதிப்பிரச்சினைகளும் தீர்க்கப்படும் என்று நம்பிப் போன, பல தலித் போராளிகள் கொல்லப்பட்ட நிலமையே காணப்படுகின்றது. தமிழ்த் தேசியம் வெறும் கோசங்களாக இருந்ததே ஒழிய அடிப்படையில் ஒன்றுமே இருந்ததில்லை.

இன்று கூட இந்தத் தமிழ் தேசிய வாதிகள் அமெரிக்காவுக்கு பெட்டிசன்கள் போடுவதாலும் ஐரோப்பிய யூனியனுக்கு கடிதங்கள் போடுவதாலும் ஒரு பிரச்சினைகளும் தீர்க்கப்படப் போவதில்லை. மாறாக ஏகாதிபத்தியங்களுக்கு சுரண்ட வழிசமைக்குமே தவிர ஐக்கியம் வளர்க்கப்பட மாட்டாது.

நாங்கள் இன்று எல்லோருடனும் பேச வேண்டிய தேவையிருக்கு. முஸ்லீம் சகோதரர்களுடனும் சிங்களச் சகோதரர்களுடனும் வேறு வேறு பலதரப்பட்ட அமைப்புக்களுடனும் கதைக்க வேண்டும். காரணம் அவர்களும் அந்தக் காலகட்டங்களில் சாதியப் போராட்டங்களுக்காக குரல் கொடுத்தவர்கள்.

இன்று தமிழர்கள் செய்ய வேண்டிய முக்கிய கடமை முஸ்லீம் சிங்கள மலையக மக்கள் ஒரு புரிந்துணர்வின் அடிப்படையில் ஐக்கியப்பட வேண்டும்.



> **“ இன்று இலங்கையில் எல்லோரும் இப்படிப் பிரிந்திருப்பதால் தான் இந்தியா சீனா போன்ற நாடுகள் ஊடுருவல்களுக்கு ஏதுவாய் இருக்கின்றது. நாங்கள் எல்லோரும் ஒன்றாய் சேர்ந்திருப்பது மிக முக்கியம். ”**

ஒவ்வொரு இனத்தவர்களின் தனித்துவமான அடையாளங்கள் மதிக்கப்படுவதோடு வாழ்க்கை முறைகளையும் கலாச்சாரத்தையும் கவனமெடுத்து செயற்படல் வேண்டும்.

இன்று இலங்கையில் எல்லோரும் இப்படிப் பிரிந்திருப்பதால் தான் இந்தியா சீனா போன்ற நாடுகள் ஊடுருவல்களுக்கு ஏதுவாய் இருக்கின்றது.


நாங்கள் எல்லோரும் ஒன்றாய் சேர்ந்திருப்பது மிக முக்கியம்.

*போராட்டம்:- தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் முக்கியத்துவம் பற்றி.....?*

*தோழர் தேவதாஸன்:-* தமிழ்த்தேசியப் போராட்டம் என்று ஒன்று உருவாகுவதற்கு முன்னரே சிறுபான்மைத் தமிழர் மகாசபை தீண்டாமை வெகுஜன இயக்கம் போன்ற அமைப்புக்கள் இருந்தது அவைகள் அழிக்கப்பட்டு விட்டது.

இந்தத் தமிழ் தேசியத்தின் ஏமாற்றங்களும், இலங்கையிலிருக்கும் ஜனநாயக மறுப்புக்களினாலும் அந்தக்காலம் தொடக்கம் இன்றுவரையிலும் சாதியால் அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருக்கும் மக்களை தூக்கிவிட வேண்டும் என்ற காரணத்துக்காகவும் அவர்களையும் முக்கியத்துவப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துக்காகவும் இன்று பிரான்சில் பல நிர்ப்பந்தங்களின் விளைவால் உருவானதே இந்தத் தலித் முன்னணி.

# தன்னலத்தைத் தூண்டும் நுகர்வாக்கம்!



மார்க்சியம் - 12

சமூகமாகக் கூடி வாழ்தலை, இன்றைய சமூக அமைப்பு சாத்தியமற்றதாக்குகின்றது. தன்னலம் சார்ந்த நுகர்வாக்கம், சமூகத்தில் இருந்தே தனிமைப்படுத்தி வருகின்றது. தனிக் குடும்பங்கள் தொடங்கி சமூகம் வரையான கூட்டுவாழ்க்கை முறைகள் அனைத்தையும், நுகர்வாக்கம் அழித்து வருகின்றது.

கூட்டுக் குடும்பங்கள் சிதைந்து சின்னாபின்னமாக, அதற்கு இறுதி ஆணி அடிக்கப்படுகின்றது. தனிக் குடித்தனத்தை அடிப்படையாகக் கொண்ட குடும்பங்கள் விவாகரத்துக்களை நாடுவது அதிகரிக்கின்றன. குழந்தைகள், முதியவர்கள் பராமரிப்பின்றி கைவிடப்படுவது சமூகப் போக்காகி வருகின்றது. தனித்தனியாக வாழ்தல் தெரிவாகின்றது. இறுதியில் அதுவே மகிழ்ச்சியற்ற உளவியல் நோயாகி விடுகின்றது. மனிதவாழ்க்கை என்பது தன்னைச் சுற்றிய குறுகிய வட்டத்திற்குட்பட்ட ஒன்றாகி வருகின்றது.

மனிதனின் கூட்டு உழைப்பானது மனிதனை சமூக உயிரியாக்கியது. எல்லோருக்கும் எல்லாம் பகிரப்பட்ட மனித வாழ்க்கை முறையின் எச்சங்கள் இன்று காணாமல் போகின்றது. மனிதன் கூடி கூட்டாக வாழ்ந்த வாழ்வு தனிவுடமையால் சிதைவுற்ற போது, தோன்றியதே நட்பு - தோழமை - காதல் - அன்பு - அரவணைப்பு - துணை - உதவி - பொறுப்பு - கடமை .. என்று பல்வேறு விதமான வாழ்க்கை முறைகளும், சமுதாய உறவுகளும். இப்படி சமுதாய உள்ளடக்கத்துடன் கூடிய மனித வாழ்வும் உணர்ச்சிகளும், இன்று அர்த்தம் இழந்து அவை நுகர்வுணர்வாகி வருகின்றது.

தந்தைக்கு ஒரு தினம், தாய்க்கு ஒரு தினம், காதலுக்கு ஒரு தினம் .. என்று, எல்லா மனித வரம்புகளும் குறுகி வருகின்றது. அதுவும் நுகர்வுச்சந்தை என்னும் அதன் உணர்ச்சிக்குள் முடங்கி விடுகின்றது.

இந்த நுகர்வாக்க சமூக அமைப்பில், சமூக வாழ்வுக்கும், அதன் உணர்வுக்கும் இடமில்லாமல் போகின்றது. இரண்டு மனிதனுக்கு இடையில் இருக்கக் கூடிய உறவானது, தன்னலம் கொண்ட சுயநலமாகி விடுகின்றது. காதல், அன்பு .. அனைத்தும் வெறும் கோதாகி நுகர்வுக்குரிய கருவியாகி வருகின்றது.

நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறை உருவாக்கிய மனித உறவுகள் உணர்ச்சிகள், முதலாளித்துவ உற்பத்தி முறையுடன் முரண்பட்டு வந்தது. பண்பாட்டுக் கலாச்சாரத் தளத்தில் எஞ்சிய இந்த மனித உறவுகளை, தொழிலாளி வர்க்கம் என்ற கூட்டு உழைப்பு உருவாக்கிய சமூக மனப்பாங்கு தற்காத்து வந்தது. நுகர்வாக்கம் மனிதர்களை தனித்தனியாக நுகரக் கோரி, இன்று மக்களை பிளந்து விடுவதால் முந்தைய மனித உறவுகள் முடிவுக்கு வருகின்றது.

உதாரணமாக திருமணத்தை எடுப்போம். இருவர் கூடி வாழும் முடிவை எடுக்கும் போது, தங்களது தனித்தனியான முடிவுக்கு பதில் கூட்டு முடிவை எடுக்கின்ற முன்னேறிய சமூக செயற்பாட்டுக்கு வருதலாகும். பாலியல் நடத்தை கூட இந்த சமூக மனப்பாங்கை அடிப்படையாகக் கொண்டு பிரதிபலிப்பதாகும். இந்த அர்த்தத்தில் இன்று திருமணங்கள் நடப்பதுமில்லை, கொண்டாடுவதுமில்லை. திருமணங்களில் கூடியுண்டு, கூட்டு மனப்பாங்கை வெளிப்படுத்துவது குறைந்து வருகின்றது. திருமணம் செய்வோர் தங்களை மொடலாக முன்னிறுத்த முனையும் நிகழ்வே திருமணமாக, திருமணத்தில் கலந்து கொள்வோர் தங்களை முன்னிறுத்திக் காட்டும் ஆடம்பர விளம்பர நிகழ்வாக மாறி வருகின்றது. எல்லாம் சடங்காக, சம்பிரதாயமாக, கடமையாக... அவை மனித உணர்ச்சியற்ற சந்தைக்குரிய பொருள் சார்ந்த உணர்வாகி விடுகின்றது. இறுதியில் பணம் கைமாறும் நிகழ்வாகக் கூட இவை மாறிவிடுகின்றது.

இது இன்றைய நுகர்வாக்க விளம்பரப் பொருளுக்குரிய சந்தையை பிரதிபலித்த பண்பாடாக கலாச்சாரமாக மாறி இருக்கின்றது. மனித உறவுகளுக்கும், கூட்டு மனப்பாங்குக்கும் இங்கு இடமில்லை. இப்படித்தான் எங்கும் எல்லாம் மாறி வருகின்றது.

ஆதிகால சமூகத்தில் மனிதர்கள் கூட்டாக இணக்கமாக கூடி வாழ்ந்த போதான மனிதத் தன்மைகள் இன்றில்லை. அதாவது இரண்டு மனிதர்கள் இணக்கப்பாடு கொண்ட முடிவுகளுடன் கூடி வாழ்தல் என்பது சாத்தியமற்ற ஒன்றாக, முரண்பாடுகள் கொண்ட ஒன்றாக மாறி வருகின்றது.

இந்த நுகர்வாக்க சமூக அமைப்பினுள்ளான தனிமனித நியாயங்கள் மற்றும் தனிமனித உரிமைகள் பற்றியதாகவே, இவ்விடையம் பொதுவாக புரிந்து கொள்ளப்படுகின்றது. இது ஏன், எப்படி நிகழ்கின்றது என்ற அடிப்படைக் காரணத்தை தெரிந்து கொள்ள முடியாத வண்ணம், தன்னலம் சார்ந்த வாழ்க்கையும் சிந்தனைமுறையும் தடையாக இருக்கின்றது. தன்னை முதன்மைப்படுத்திக் கொள்கின்ற உலகக் கண்ணோட்டமாக, அதை அடிப்படையாகக் கொண்ட தனிமனித உரிமைகளாக, அவை சட்டவாக்கம் பெற்ற அமைப்பாகவே உலகம் குறுகி வருகின்றது. மனிதர்கள் கூட்டாக உருவாக்கும் பொது வாழ்க்கைக்குப் பதில், தனித்தனியான சட்டவகையான வாழ்க்கையாகி வருகின்றது.

கூட்டாக உழைத்து கூட்டாக வாழ்வதாலேயே சமூக உயிரியாக மனிதன் இருந்ததால், சமூக தன்மையை பெற்று முன்னேறினான். ஆனால் இன்று அந்தத் சமூகத் தன்மையை இழந்து தனிமனிதனாக சிதைந்து வருகின்றான். இவை இன்று சமுதாய உளநோய்களாக, தனிமனித உளவியல் சிக்கலாக மாறி வருகின்றது. தனித்தனியான வாழ்க்கை முறையும், அவையோ இந்த சமூக அமைப்பினுள் தீர்க்க முடியாத முரண்பாடுகளாக தோன்றுகின்றது.

இன்றைய இந்த சமூக அமைப்பின் எல்லாவிதமான சமூதாய பிரச்சனைகளுக்கும் அடிப்படையாக இருப்பது, அனைவருக்குமான பொதுவுடைமையிலான வாழ்க்கை முறையை மறுக்கும், தன்னலத்தை அடிப்படையாகக் கொண்ட தனிவுடமையிலான முறைதான்.

தனிவுடமையை முதன்மையாகக் கொண்ட சமூகம், மனிதனுக்கு மேலாக பொருளை முதன்மையாக்குகின்றது. பொருளை அடைவதைக் கொண்டு சமூக மதிப்பீடுகளை உருவாக்குகின்றது. தாழ்வு, உயர்வு முதலாக எல்லாவகையான வாழ்க்கை முறை வரை, அனைத்தையும் பொருளைக் கொண்டு தீர்மானிக்கின்றது. தனிவுடமைச் சமூக அமைப்பில் இதை போற்றி ஒழுகி வாழ்கின்ற மனிதர்கள், அதையே மீளப் பிரதிபலிக்கின்றனர்.

இதனால் கூட்டு வாழ்க்கையை தம் மீதான சுமையாகக் கருதுகின்றனர். தான், தன் உலகம் என்னும் தன்னலத்தையே "சுதந்திரமானதாகவும், தனிமனித உரிமையாகவும்" கூட கருதுகின்றனர். தனிவுடமை சார்ந்து தன்னலம் முதன்மை பெற்றுவிட, மனிதனுக்கேயுரிய சமூகத் தன்மை அழிந்து விடுகின்றது.

தனிப்பட்ட, தன்னுடன் தொடர்புபட்ட குழந்தைகள் மற்றும் முதியவர்களை, தன் மீதான சுமையாக காண்கின்றது. இதுமட்டுமல்ல இயற்கை உந்தும் பாலியல் சார்ந்து இருவராகக் கூடி வாழ்தலைக் கூட, தனது முன்னேற்றத்துக்கான தடையாக கருதும் அளவுக்கு அதையும் தகர்க்கின்றது. பாலியல் தேவையை நுகர்வு என்னும் குறுகிய எல்லைக்குள் அடையக் கூடிய ஒன்றாக அதை மாற்றி அமைக்கின்றது. முதியவர்களையும் - குழந்தைகளையும் சட்ட வகைப்பட்ட பண்ணையில் பராமரித்தல் - வளர்த்தல் என்னும் அளவுக்கு அனைத்தையும் சமூகத்தன்மையற்ற ஒன்றாக மாற்றி அமைக்கின்றது. இனவிருத்தியுடனான தாய்மை - பாசம் போன்ற அனைத்தும் மனிதனிடம் இருந்தே அருகி வருகின்றது.

மனித உறவுகளை வெறும் பொருள் சார்ந்த உறவாக, சட்ட வகைப்பட்ட மனித நடத்தையாக மாற்றி விடுகின்றது. தான் அல்லாத அனைத்தும், தன் சுயநலம் சாராத அனைத்தையும் தனக்கு பாரமாக சுமையாக மாற்றுகின்றது. மனித விருத்தியுடன் தொடர்புபட்ட குடும்பம் என்னும் சங்கிலித் தொடரை, தன் சுய நுகர்வாக்கத்தை முதன்மைப்படுத்திவிடும் சமூக அமைப்பில் அறுத்து விடுகின்றது. நுகர்வாக்க அமைப்பில் குடும்பத்துக்கு இனி இடமில்லை.

அன்றாட வாழ்வில் தன்னலத்துடன், தன்மை முதன்மைப்படுத்தி வாழ்தல் போற்றப்படுகின்றது. அதுவே தனிமனித இலட்சியமாக முன்னிறுத்தப்படுகின்றது. சக மனிதனை தனக்கு போட்டியாளனாக - எதிரானவனாக கருதவும், பார்க்கவும் வைக்கின்றது. மற்றவனுக்கு குழி பறிப்பதையும், அழிப்பதையும் மனித மனப்பாங்காக்குகின்றது. மற்றவனை இழிவாக்குவதன் மூலமும், அடிமை கொள்வதன் மூலமும், தன்னை பெருமைப்படுத்திக் கொள்வதும், மேம்படுத்திக் கொள்வதும் நடந்தேறுகின்றது.

மனிதப் பண்பாடுகள், பரஸ்பர உறவுகள், மனித உரிமைகள் ... அனைத்தும், இந்த வரம்புகளாலேயே கட்டமைக்கப்படுகின்றது.


தனிவுடமை நுகர்வாக்க சமூக அமைப்பானது, கடந்த காலத்தில் இருந்தும் எஞ்சிய சமுதாய சமூக எச்சங்களை அழித்து வருகின்றது. நிலப்பிரபுத்துவ அமைப்பிலான குடும்பத்தில் முதன்மையாக இருந்த ஆணின் தன்னலத் தன்மையே, சமூகத்தின் அனைத்து உறுப்புக்களின் இருப்புக்கான பொதுக் கூறாகின்றது. பெண்கள் - குழந்தைகள் கூட, ஆணின் தன்னலத்தையே தனக்கான தெரிவாக மாற்றுகின்றனர். குடும்பத்தில் பரஸ்பரம் சுயநலத்தை அங்கீகரித்தல் மட்டுமே குடும்பம் என்னுமளவுக்கு, மனித உறவுகள் மாறி வருகின்றது.

இப்படிக் குடும்பம் குறுகுவதும், தன்னலம் சார்ந்த அக முரண்பாட்டால் குடும்பங்கள் சிதைவதும் நடந்தேறுகின்றது. கணவன் - மனைவி - குழந்தை - உற்றார் - அயலவர் இடையிலான கடந்தகால கூட்டுவாழ்வை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை அழிவுக்குள்ளாகி வருகின்றது.

எங்கும் எதிலும் நுகர்வாக்கம் முதன்மை பெற்றுவிட்டும் நிலையில்,

14 ஆம் பக்கம் பார்க்க...







# எங்கள் பெண்களை மற்றவர்கள் எப்படி காதலிக்கலாம்!!

இலங்கை இராணுவத்தால் பாலியல்வன்முறை செய்யப்பட்ட தமிழ்பெண்களின் கதறல்கள் வன்னியில் கொட்டப்பட்ட வெடியோசைகளை மேவி ஒலித்தன. மட்டக்களப்பின் வயல்வெளிகளில்,மன்னாரின் கடற்கரைகளில்,செம்மணி வெளிகளில் என்று எங்கும் தமிழ்ப்பெண்களின் மீதான பாலியல்வன்முறை அரசபடைகளால் கட்டவிழ்த்து விடப்பட்டது. பகல்களிலும்,இரவுகளிலும் அந்தக்குரல்கள் கேட்டுக் கொண்டிருந்தன. அவமானம் தாங்க முடியாமல்,வலி பொறுக்க முடியாமல் ஒலித்துக் கொண்டிருந்தன. ஆதரவு தேடி,அபயம் கேட்டு,அந்தக் கயவர்களை சபித்தபடி அந்தக் குரல்கள் எழுந்து கொண்டிருந்தன. அழுதும்,ஆற்றாமல் முனகியும் அவை அடங்கிப் போயின.

அந்த பெண்களின் மீதான வன்முறை குறித்து யாழ்ப்பாணத்தில் ஒரு ஒற்றைக்குரல் கூட எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அரசபடைகளின் ஆக்கிரமிப்பிலே அடிமைப்பட்டு கிடக்கிறது என்றாலும் ஒரு சுவர் எழுத்து,ஒற்றைக் கடதாசியில் ஒரு எதிர்ப்பு எழுத்து கூடவா எழுத முடியாமல் போய் விட்டது. ஆனால் இன்றைக்கு கோண்டாவில் பெண்ணை,உரும்பிராய் ஆண் காதலிக்கிறான் என்றவுடன் கோண்டாவில் தேசியவீரர்கள் கொதித்தெழுந்து கொலை செய்திருக்கிறார்கள். தமிழ்மொழி பேசுபவர்கள்,ஒரே மதம்,ஒரே பிரதேசம் யாழ்ப்பாணத்து வலிகாமம்,அதிமுக்கிய விடயமாக ஒரே சாதி அப்படி இருந்தும் கோண்டாவில் தேசியவீரர்கள் ஏன் கொலை செய்தார்கள்?

ஏனெனில் இந்த ஆணாதிக்கப்பன்றிகளைப் பொறுத்த வரை பெண்கள் ஆண்களிற்கு அடிமையானவர்கள். அவர்கள் ஆண்களின் சொற்படி நடக்க வேண்டும். ஆண்கள் சொல்பவரை தான் மணம் செய்ய வேண்டும். இந்த கோண்டாவில் பெண்ணுக்கும் அந்த கொலைகாரர்களிற்கும் எந்த சொந்த பந்தமும் இருக்காவிட்டாலும் அவள் இன்னொரு ஊர் ஆணை காதலிப்பதை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியாது. இன்னொரு ஊர்க்காரனை அல்ல, ஒரே ஊரின் வேறு தெருக்காரனை காதலித்தாலும் இவர்களிற்கு பிடிக்கவில்லை என்றால் கொலை செய்வார்கள். பெண் மற்றவனை காதலித்தால் உயிர்வாழ விடா கவரிமான்கள் இவர்கள்.

தருமபுரி இளவரசன் இறந்து ஒரு வருடமாகிறது. அவன் ஒரு தமிழன் இன்னொரு தமிழ்ப்பெண்ணான திவ்வியாவை காதலித்ததால் மரணமடைந்தான். வன்னிய சாதிவெறியர்களினால் அவன் மரணமடைந்தான். தமிழ் இடிதாங்கி ராமதாசு "வன்னிய பெண்களை தாழ்த்தப்பட்டவர்கள் காதலிப்பதாக சொல்லி ஏமாற்றுகிறார்கள்" என்று சாதிவெறி கக்கியது. வன்னியசாதிப் பெண்கள் வன்னியசாதி ஆண்களின் உடமை. அவர்கள் ராமதாசின் வன்னியசாதிச் சங்கம் சொல்கிறபடி தான் காதலிக்க வேண்டும்,கல்யாணம் செய்ய வேண்டும். தமிழ்,தமிழன் என்று சொல்லிக் கொண்டு சாதி கொண்டு பிரிக்கும் காட்டுமிராண்டித்தனம் தான் ராமதாசின் தமிழ்த்தேசியம். இந்த வன்னியத் தமிழ்த்தேசியத்தில் தாழ்த்தப்பட்டவர்களிற்கு இடமில்லை. அவர்கள் தமிழர்கள் இல்லை.




தமிழ் யுவதியை இராணுவ வீரர் திருமணம் செய்வதா? திரைப்பட வெளியீடு இரத்து என்று யாழ்ப்பாணத்து உதயன் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. ஒரு தமிழ்ப்பெண் சிங்களவரை எப்படி திருமணம் செய்து கொள்ளலாம் என்று அதன் பத்திரிகை தர்மம் பதைபதைக்கிறது. ஆனால் ஒரு தமிழ் ஆண் சிங்களப் பெண்ணை மணம் செய்வதாக காட்டி இருந்தால் இவர்களிற்கு பிரச்சனை இல்லை. சாதி,மதம்,இனம் என்பனவற்றை பெண்கள் மீறக்கூடாது என்பது தான் இந்த பிற்போக்குவாதிகளின் பெருங்கவலை.

மணிரத்தினத்தின் "பம்பாய்" படம் பம்பாய் கலவரத்திற்கு சிவசேனையும்,முஸ்லீம் மக்களும் சமபொறுப்பு என்று பொய் பேசியது. பாதிக்கப்பட்டவர்களை எப்படி கலவரத்திற்கு பொறுப்பாக்கலாம் என்று சில முஸ்லீம் அடிப்படைவாதிகள் கேள்வி கேட்கவில்லை. ஒரு இந்து ஆணை முஸ்லீம் பெண் காதலிப்பதாக எப்படி படம் எடுக்கலாம் என்றே அவர்களிற்கு கோபம் வந்தது.

யாழ் பல்கலைக்கழக முஸ்லிம் மஜிலிஸ் என்ற அமைப்பு தமிழ் மாணவர்களோடு முஸ்லீம் மாணவிகள் பேசக் கூடாது என்று தடை விதித்திருக்கிறதாம். "பேசவேண்டாம் என்ற இவர்களது கட்டுப்பாடுகளை மீறிச் செயற்பட்டதாக சில முஸ்லிம் மாணவிகள்மீது நடத்தைக் கேடானவர்கள் என குற்றஞ்சாட்டி கடிதமொன்றை இந்த மஜிலிஸ்ஸை சேர்ந்தவர்கள் பல்கலைக்கழக ஒழுக்காற்று அதிகாரியிடம் கையளித்துள்ளனர். இம் மாணவிகள்மீது இவர்களது தொடர்ச்சியான அழுத்தங்களினால் மனமுடைந்த குறிப்பிட்ட மாணவிகள் பல்கலைக்கழக கல்வியை இடைநிறுத்தப்போவதாக கண்ணீரும் கம்பலையுமாக விம்முகின்றனர்" என யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் விடுத்துள்ள அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

இனம்,மதம்,மொழி என்று மக்களைப் பிரிக்கின்ற எந்த பிற்போக்குவாதிகளும் பெண்களை அடக்குவதில் ஒரேமாதிரியே இருக்கிறார்கள். மக்களைப் பிரிக்காது சமத்துவத்திற்காக போராடும் பொதுவுடமை சமுதாயத்திலேயே பெண்களது அடிமை விலங்குகள் உடைந்து நொறுங்கும்.

# யாருக்காக ஜனாதிபதி!

நிறைவேற்று அதிகாரங்களை தன்னகத்தே குவித்து வைத்திருக்கும் ஜனாதிபதி ஆட்சிமுறைமைக்குப் பதில் பாராளுமன்றத்தின் வழி ஆட்சியதிகாரம் நிர்வகிக்கப்படுதல் வேண்டும் என்ற கோரிக்கைகள் பலராலும் தற்போது ஜனாதிபதி தேர்தல் பற்றிய பரபரப்புகளுக்கிடையில் முன்மொழியப்பட்டு வருகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை தற்போதைய ஜனாதிபதிக்கு எதிராக நிறுத்துவது பற்றியும் பேசப்படுகின்றது. அடுத்த வருடத்தின் முதலிரு மாதங்களுக்குள் ஜனாதிபதி தேர்தல் நடாத்தப்படலாம் என்ற அடிப்படையில் பல முகாந்திரங்களிலிருந்தும் தேர்தலில் போட்டியிடுவது பற்றியும்,யார் எல்லாம் ஜனாதிபதி வேட்பாளரை தனியாகவோ கூட்டாகவோ நிறுத்தப் போகிறார்கள் என்ற அரசியல் ஆருடங்களும் ஆரவாரமாகவே கேட்கத் தொடங்கியுள்ளது.

நிறைவேற்று அதிகாரங்கள் தனி ஒரு ஜனாதிபதியின் கைகளில் குவிக்கப்பட்டிருக்கும் முறைமையினை இல்லாதொழிக்கப் போவதாக கூறி போட்டியிட்டு வென்ற முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா பதவியில் அமர்ந்தவுடன் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கையிலெடுத்து அந்த அதிகாரச் சொகுசின் பிரதிநிதியாகவே பதவிக்காலத்தில் தன்னை தக்க வைத்துக் கொண்டார்.

ஒருநாட்டின் அதிபர் என்ற அதியுயர் பொறுப்பு மட்டுமன்றி அனைத்துவித அதிகாரங்களையும் கொண்ட இந்த ஜனாதிபதி முறையினை 1978 ம் ஆண்டு இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தினை மாற்றி உருவாக்கியது மட்டுமல்லாமல் மிகுந்த தற்செருக்குடன் இலங்கை தேசத்தினை போருக்குள் வீழ்த்தியது அன்றைய யூ.என்.பி யின் அதிபர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன என்பதனை இங்கு மீளப்பதிவு செய்தேயாக வேண்டும். ஒரு நாட்டின் அதிபர் கைகளில் குவிக்கப்பட்ட அனைத்து அதிகாரங்களையும் கையில் கொண்டு உருவாக்கப்பட்ட பொருளாதார கொள்கைகளும், ஏகாதிபத்திய உறவுகளும் இலங்கை எனும் தேசத்தினை சீரழித்து மக்களுக்கு வழங்கியது நீண்ட கொடியபோரையும் வறுமையையும் துன்பச் சுமைகளையும், சூழல் மாசடைதலையும் மட்டுமே.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன நிறைவேற்று அதிகாரங்களையுடைய ஜனாதிபதி முறைமையின் கருத்தாக்கத்தை மட்டுமல்ல அதனை நிறுவனப்படுத்தி அதிகாரங்களை தனிமனிதக் கரங்களில் குவித்து நடைமுறைப்படுத்திய அரசியல் சிற்பியுமாவார். மக்களது வாக்குகளால் தேர்தல் முறையில் தெரிவுசெய்யப்படும் பாராளுமன்ற பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்ற அவைக்கு உட்படுத்தப்படாத அதிகாரங்களை ஜனாதிபதிக்கு வழங்குவதே இந்த ஜனாதிபதி முறைமை என்றும் அவர் அதனை விதந்துரைந்தார். தேர்தலில் மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் கொண்ட பாராளுமன்றம் ஒன்று தான், மக்கள் தாங்கள் தெரிவு செய்து அனுப்பும் பிரதிநிதிகள் ஊடாக தங்களை தாங்களே ஆள்வதற்கான அதியுயர் ஜனநாயக வடிவம் என்று முதலாளித்துவ அறிஞர்களால் மீண்டும் மீண்டும் பீற்றப்படுகின்றதொன்றாகும். இந்தப் பீற்றலை புறந்தள்ளி அதிகாரங்களை பாராளுமன்றதிலிருந்து பிடுங்கி தனியொரு அதிபர் கைகளில் குவித்து ஜனாதிபதி முறைமையை உருவாக்கியதில் யூ.என்.பியின் அன்றைய தலைவர் ஜே.ஆர் அடைந்து கொண்டது ஒரு அங்கீகரிக்கப்பட்ட சர்வாதிகாரமேயன்றி வேறல்ல.

எந்த மக்களுக்கு தேர்தல் வழி மூலம் ஜனநாயகம் உண்டென்று கூறிக்கொண்டு மக்கள் வாக்குகளால் ஜனாதிபதி தெரிவு செய்யப்படுகிறாரோ, அதேபோல் அதே மக்களாலேயே தெரிவுசெய்யப்படும் பாராளுமன்ற அவைக்கே கட்டுப்படாத அதிகாரங்களை கொண்டவராகிறார் ஜனாதிபதி. தான் எந்த மக்களால் தெரிவுசெய்யப்பட்டாரோ, அதே மக்களாலேயே தெரிவுசெய்யப்படும் பாராளுமன்றத்துக்கு வெளியிலும் தனிச்சிறப்பானஅதிகாரங்களையுடைவர் ஜனாதிபதி எனும்போது பாராளுமன்றத்தையோ அதனது தீர்மானங்களையோ கருத்துக்களையோ கணக்கிலெடுக்கத் தேவையின்றிய அதிகாரம் அவர் கைகளில் சேர்கிறது.

பாராளுமன்றத்துக்கு பதில் சொல்லவோ அல்லது செவிசாய்க்கவோ தேவையின்றியதான ஜனாதிபதியானவர், மக்களால் தெரிவு செய்யப்படாத, மற்றும் பாராளுமன்றத்துக்கு வெளியில் கட்டமைக்கப்பட்டு தனிநபர்கள் அல்லது நிபுணர் குழுக்களின் கருத்துக்களை ஆலோசனையாகப் பெறுகிறபோது அது எவ்வகைச் செல்வாக்கினைச் செலுத்தும், அந்த ஆலோசனை எவருக்கு நன்மை தருவதாயிருக்கும் என்பதை கட்டுரையின் இறுதியில் பார்க்கலாம். இவ்வாறான ஒரு குழாமின் செல்வாக்குகளுக்கு இடமளிப்பது என்பது அவர்கள் கூறும் ஜனநாயக முறைமைக்கு முரணானதல்லவா?ஜனநாயகத்தை சொல்லியே ஜனநாயகம் சாகடிக்கபடுகிறதல்லவா? இது சுத்துமாத்தல்லவா?இதுவா ஜனநாயகம்?

இந்த ஜனாதிபதி முறையானது ஜே.ஆரினால் தோற்றுவிக்கப்பட்ட போதே இது ஒரு அரசுக்கான ஜனநாயகப் பண்பிற்கு மிகுந்த ஆபத்தினை தருகின்ற சர்வாதிகாரத்துக்கு வழிவகுக்கும் என எச்சரிக்கப்பட்ட போதும், எதிரான குரல்கள் பலத்துக் கிளம்பியபோதும் அவற்றையெல்லாம் கடந்து கடந்த மூன்று தசாப்தங்களாக இந்த ஜனாதிபதி முறைமை நிலைபெற்று வருகின்றது.

இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்னரான காலத்தில்,இச் சர்வாதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமை கொண்டுவரப்பட்டதன் பின்னர் நாடு சந்தித்துக் கொண்டவை முப்பது வருடகாலப் போரும் நாசமான விளைவுகளுமே. இன்றுவரைக்கும் இத் துன்பங்களையே மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

ஏற்கனவே இருந்த அதிகாரங்கள்போதாதென்று அதற்கும் மேலாகவே 18 வது திருத்தச் சட்டத்தின் மூலம் ஜனாதிபதியின் பதவிக்கால எல்லை நீக்கம்,மற்றும் நியமனங்களை மேற்கொள்வதற்கான அதிகாரங்கள்,2010 செப்ரம்பர் 8 இல் இணைத்துக் கொள்ளப்பட்டதானது இருந்த கொஞ்சநஞ்சமான ஜனநாயகத்தின் முதுகெலும்பென போற்றப்படும் அரசுத்துறைகளின் சுயாதீனங்களையும் அடித்து நொருக்கி விட்டது.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் அதிகாரங்கள், நீதித்துறையின் சுயாதீனத்துக்கு அச்சுறுத்தலாகும். நீதித்துறையில் தலையிட்டு ஜனாதிபதி நியமனங்களை செய்வதற்கான அதிகாரத்தினை அது வழங்குகிறது. அது மட்டுமன்றி வேறும் முக்கிய அதிகாரிகளை ஜனாதிபதி நியமிக்க அதிகாரம் உடையவராகிறார். தகுந்த அதிகாரிகளை நியமனம் செய்யத் தவறுகின்றபோது தானே அவ் அதிகாரங்களை பொருத்தமான அதிகாரிகளை நியமிக்கும் வரை சுவீகரித்துக் கொள்வதற்கும் 18 வது திருத்தச் சட்டம் மேலும் இடமளிக்கிறது. பிரதம நீதியரசர் தெரிவு, அதிஉயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளின் தெரிவு, மேன்முறையீட்டு நீதிமன்றங்களுக்கான நீதிபதிகளின் தெரிவு, நீதிப் பரிபாலன ஆணைக்குழுவின் தலைவர் தவிர்ந்த மற்றைய அங்கத்தவர்கள் தெரிவு, சட்ட மேற்பார்வை ஆணையர்,பிரதம மந்திரி,பாராளுமன்ற செயலர் போன்ற நியமனங்களில் தெரிவுகளை செய்வதற்கு அதிகாரமுடையதாய் இருக்கின்ற போது நீதித்துறையே அரசியல் சாசனத்துக்குப் பதில் ஜனாதிபதிக்கு கட்டுப்பட்டதாகி விடுகிறதல்லவா? எந்தத் தனிநபரும் நம்பிக்கைக்குரியவர்களாக இருக்க முடியாது. அதிகாரங்களுக்கு கடிவாளம் இடுவது தானே பொருத்தம். ஆனால் அப்படியிருக்கும் போது ஜனநாயகத்தின் பெயரால் அதிகாரங்களை தனிநபர் கையில் கட்டற்றுக் குவித்துவிடுவது வில்லுக்கு நாணேற்றுவதாகவே இருக்கும்.

ஜனாதிபதியை பதவியிறக்குவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் அடிப்படையில் உச்ச நீதிமன்ற விசாரணை கோரப்பட வேண்டும் என்கிறது நிறைவேற்று அதிகார முறைமை. மறுபுறத்தில் தலைகீழாக, பாராளுமன்றத்தை எப்போதும் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. இது என்ன கேலிக்கூத்து?.

நாட்டின் அதிபராக, அரசாங்கத்தின் தலைவராக,முப்படைகளுக்கும் கட்டளையிடும் தலைவராக ஜனாதிபதி இருக்கின்றார். இந்த அதிகாரங்களை விஞ்சி என்ன தான் அசைய முடியும்?

சரி ஏன் இந்த நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதி முறை உருவாக்கப்பட்டது என்கிறபோது இதே ஜனநாயகத்தின் காவலர்கள் என்ன சொல்கிறார்கள் என சுருக்கமாகப் பார்ப்போம்.

திறந்த சந்தைமுறைப்பொருளாதாரத்தின் தடையற்ற வளர்ச்சிக்கும் அதன் மூலமாக அபிவிருத்திகளை“இடைமுறிவின்றி வளர்த்தெடுப்பதற்கும்,பாராளுமன்ற ஜனநாயகம் மாறிக்கொண்டிருப்பதும் பொருத்தமற்றதும் வலுவில்லாததுமாகும். இப் பாராளுமன்ற அதிகாரம் என்பது குறிப்பிட்ட பொருளாதார அரசியல் போக்கினை நிடித்து வைத்திருப்பதற்கு ஏதுவாய் நிலையானதொன்றாகவும் இருக்க முடியாது. எனவே நிலையான, மையப்படுத்தப்பட்ட, அதிகாரங்கள் குவிந்துள்ள அரசியல் கட்டமைப்பு,இடைமுறிவின்றிய வகையில் திறந்த சந்தைப் பொருளாதாரத்துக்கு வழிவிடும் வண்ணம் தனது அதிகாரத்தை தரக்கூடியதாக இருக்க வேண்டும். இவ்வதிகாரத்தை பெறவேண்டுமாயின் பாராளுமன்ற ஜனநாயகம் என்பது அதற்கு இடையூறு. அதாவது ஜனநாயகம் திறந்த பொருளாதாரம் சார்ந்த அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் குறுக்கே வருகின்றது. திறந்த சந்தைப் பொருளாதாரத்துக்காகமட்டுமல்ல அபிவிருத்திக்காக ஜனநாயகம் என்பது எப்போதும் சமரசம் செய்துகொள்ளப்பட வேண்டியதொன்று. ஆகையால் பாராளுமன்ற ஜனநாயகத்துக்கு புறம்பான அதிகாரங்களை தனிநபர், அவருக்கு ஆலோசனை தரக்கூடிய சில குழுக்கள் (சந்தைப் பொருளாதாரத்துக்கானநிதி மூலதனக் கும்பல் சார்ந்த பொருளாதார அரசியல் ஆலோசகர்கள்) வசம் ( தனித் தேர்தல் மூலம்) குவிப்பதன் மூலம் தங்குதடையின்றி சந்தைப்



பொருளாதாரமும் அதன் மூலதனமும் இயங்க முடியும்.இச் திறந்த சந்தைப் பொருளாதாரம் உருவாக்கும் அபிவிருத்தியே (அதாவது மூலதனம் தானே தன்னை வளர்த்துக் கொள்வதே) அபிவிருத்தியாகுமென்றது முதலாளித்துவம். நிறைவேற்று ஜனாதிபதி முறையே இவ் அதிகாரங்களைத் தரும்என்பதின் அடிப்படை தான் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவால் கொண்டுவரப்பட்ட நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதி முறைக்கான காரணமும் அவர்கள் தரும் அரசியல் பொருளாதார விளக்கமும்.

இந்த ஜனாதிபதி முறைமை யாருக்கு சேவை செய்வதற்காக என்பது இதன் மூலம் வெளிப்படையாகின்றது.



இந்த ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்று தான் அன்றைய மகிந்த ராஜபக்சவும் கூட கூறியிருந்தார். ஆனால் 18 வது திருத்தச் சட்டத்தின் மூலம் மேலும் அதிகாரங்களை குவித்துக் கொண்டார். இத்தடவை திறந்த சந்தைப் பொருளாதாரத்துக்காக அல்ல ஆனால் ஏகாதிபத்தியங்களின் நவதாராளமய பொருளாதாரத்துக்கு தடையின்றிய வகையில் நாட்டை சூறையாடுவதற்கு திறந்து விடுவதற்காகவே.

எனவே உழைக்கும் மக்களது பாதை எதுவாக இருக்கவேண்டுமெனில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை மட்டும் நீக்கு என்ற தேர்தல் கோசங்களோடு நின்றுவிடாமல் உழைக்கும் மக்களைச் சுரண்டும் அரசியல் பொருளாதார முறைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் சக்திகளோடு கரம் கோர்த்து ஒரு ஒட்டுமொத்த விடுதலைக்காக அணிதிரளவேண்டும் என்பதேயாகும்.












# ஐக்கிய தொழிலாளர் சங்க தலைவர் தோழர்.லீனஸ் ஜயக்கொடி

**கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் 'சமஉரிமை இயக்கம்"இனவாதத்திற்க்கும்மதவாதத்திற்க்கும் குலவாதத்திற்க்கும் எதிராக ஏற்பாடு செய்த மாநாட்டி.ல் கலந்துகொண்ட முக்கியஸ்தர்கள் ஆற்றிய உரைகளின் சுருக்கம்.**

சென்றமாதம் 15ஆம் திகதி இந்தநாட்டில் மீண்டும் எமக்கு கறுப்பு ஜுலையை நினைவுபடுத்தி மிகப்பெரிய சங்காரம் தர்காநகர், அழுத்கம, பேருவளை போன்ற பகுதிகளில் இனவாதிகள் அரசாங்கத்தின முழுமையான ஆதரவுடன் அப்பகுதி முஸ்லிம் மக்கள் மீது வன்முறைகளை கட்டவிழ்த்துவிட்டனர். இது நடந்து ஒருமாதத்திற்குபின்பதாக ஜுலை 15ஆம் திகதி எமது எதிர்ப்பை மீண்டும் தெரிவிக்கும் ஆரம்பமாக இன்றைய தினம் "சமஉரிமை இயக்கம்" இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது. 1983 கறுப்பு ஜுலை வன்முறைகளின் போது நாம் வீதிகளில் நின்றோம். நாம் தமிழ் மக்களை பாதுகாப்பதற்கு எம்மால் இயன்றளவு முடியுமான இடங்களில் செயல்பட்டோம். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது பம்பலப்பிட்டி சென்ற் பீற்றஸ் கல்லூரியை அகதிமுகாமாக மாற்றுவதற்கான பேச்சுவார்த்தைகளில் நாம் ஈடுபட்டுக்கொண்டிருந்தோம். அந்த சந்தர்ப்பத்தில் எங்களில் பலரை கைதுசெய்வதற்கான அறிவித்தலை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசு வெளியிட்டது. எம்மை பொறுத்தவரை ஜே.ஆர் அரசின் அறிவித்தலுக்கு அடிபணிந்து கைதாவதை தவிர்த்து மறைந்து மறைந்தாவது தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும் என்பதாகும். எனவே எமது அரசியல் கட்சிகளுக்கு வெளிப்படையாக இயங்கமுடியாத நிலையில் இரகசியமாக செயல்படவேண்டியதாயிற்று.

இந்த நாட்டில் நாம் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டியது 30வருடகால யுத்தபேரழிவுக்குள் சிக்கிய மக்கள், மீண்டும் 2014இல் சிறுபான்மை மக்களான முஸ்லிம் மக்கள் மீதாக மீண்டும் இனவாத தாக்குதலை தொடுக்க வேண்டியதேன்? என்பது தொடர்பிலாகும். எமக்கு நன்றாகத் தெரியும் இந்த அரசாங்கங்கள் பிரதேசங்களை ஒன்றிணைக்கவோ மக்களை சுதந்திரமாக வாழ அனுமதிக்கமுடியாத அரசாங்கங்கள். இவை மிகவும் பலவீனமான அரசாங்கங்கள். வஞ்சகமான முறையிலேயே இவர்களால் பாராளுமன்றத்தில் அதிகப்பெரும்பான்மையை பெற்றுக்கொள்ள முடியுமாயிருந்தது. வஞ்சககமான முறையில் தேர்தல்களில் வெற்றிபெற முடிந்தாலும், இது பலவீனமான சிறுபான்மை அரசாங்கமாகும். இந்தியாவை எடுத்துக்கொண்டால் அங்கும் இதுதான் நடைபெறுகிறது. அதேபோல் மஹிந்தராஜபக்ச அரசும் பிரதேசங்களை ஒன்றிணைக்கும் பாதை தெரியாத வங்குரோத்து அரசு. தமக்கு வாக்களிக்காத மக்களை அடக்கியாள முற்படுகிறது. 15ஆம் திகதி அழுத்கம, பேருவளை, பிரதேசங்களில் இடம்பெற்ற வன்முறைகளுக்கு எதிராக 18ஆம் திகதி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பதாக "சமஉரிமை ஈயக்கம்" பாரிய எதிர்ப்பு ஆர்பாடடத்தை முன்னெடுத்தன் மூலம் இந்த நாட்டில் இனவாதிகளுக்கு எதிராக பாரிய எதிர்ப்பணி ஒன்றுக்கு அத்திவாரமிட்டுள்ளது. இதன் மூலம் அச்சத்துக்குள்ளாகியிருந்த முஸ்லிம் மக்களுக்கு உற்சாகமளிக்கக் கூடியதாக இருந்தது. இதற்காக நாம் சமஉரிமை இயக்க தோழர்களுக்கு எமது மனப்பூர்வமான பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### சமஉரிமை இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர்.ரவீந்திர முதலிகே.

மக்களின் உயிர்கள் அவர்களுக்கு உரித்தான கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டு அம்மக்களை நிர்கதிக்குள்ளாக்கிய மாதமாகும். அதுநடந்து 31 வருடங்களின் பின் அழுத்கம, பேருவளை, தர்காநகர் வாழ் சகோதர முஸ்லிம் மக்களின் சொத்துக்கள் எரியூட்டப்பட்டும் உயிர்கள் பறிக்கப்பட்டும் உள்ளது. 1983 கறுப்பு ஜுலை கலவரத்தின்போது முழுசமூகமும் அமைதியாக பார்த்துக்கொண்டிருந்ததை நாம் கண்டோம். 2014 ஜுலை அண்மிக்கையில் மீண்டுமொரு இனசங்காரத்திற்கான முன்னெடுப்புகள் அழுத்கம, பேருவள நகரங்களை மையப்படுத்தி இன, மதவாத சக்திகள் ஒன்றிணைந்து திட்டமிட்டு அரங்கேற்றிய வன்முறைகளை கண்டோம். ஆனால் அன்றைய ஜுலையை போலன்றி இம்முறை ஜுலையில் இனவாதம், மதவாதம், குலவாதத்திற்கு எதிரான சக்திகள் அணிதிரண்டு ஆக்கபூர்வமாக செயல்படுவதை நாம் காண்கிறோம். இந்த ஆரம்பத்தை நாம் வரவேற்கிறோம். ஆனால் இது மிகவும் கடினமான தொலை தூரபயணமாகும். நாம் வாழும் தற்போதைய சமூகமானது இன, மொழி, மத பேதங்களுக்கு அப்பால் உற்பத்தியில் பங்கேற்று தொழில்புரியும் சமூகமாகும். அதேவேளை அந்த உற்பத்தியின் பயனை முழுமையாக அனுபவிக்கமுடியாத சமூகங்களாக நாம் இருக்கிறோம். இவ்வாறான சமூகஅமைப்பில் எப்போதும் உளவியல் தாக்கம் பரந்து காணப்படுவது தவிர்க்கமுடியாததாகும். இந்த சமூகஅமைப்பில் சமூகங்களின் மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு, மதம் போன்ற விடயங்களை விரிவுபடுத்தல் சிரமமானதாகும். இத்தகைய சமூகஅமைப்பில் பிரதேசவாதம், குலவாதம், ஊர்பிரிவினை, போன்ற விடயங்கள் தவிர்க்கமுடியாதயாகும். இதனால்தான் இனவாதம், மதவாதம், குலவாதம் போன்ற பிற்போக்கு வாதங்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறது.

வரலாறுயூராவும் எமது நாட்டு ஆட்சியாளர்கள் செய்து கொண்டிருப்பது சமூகத்தில் காணப்படும் பிற்போக்கு மனோநிலையை சாதகமாக்கி தமது ஆட்சி அதிகாரத்தை தற்காத்துக்கொள்ள பயன்படுத்திவருகிறார்கள். தமது அதிகாரபலத்தை பலப்படுத்திக் கொள்வதற்காக அனைத்து பிற்போக்குவாத செயற்பாடுகளையும் போஷித்து வருகிறார்கள். இதனால்தான் கடந்த சில தசாப்த காலமாக சிங்கள தமிழ் சமூகங்கள் ஒருவரோடொருவர் மோதலில் ஈடுபட்டு இரத்தஆறு பெருக்கெடுத்தோடியது. சமூகங்கள் மத்தியில் மனிதத்துவம் அருகி மிலேச்சத்தனம் முன்னிலை வகித்தது. இக்காலப்பகுதியில் பல்வேறு இனவாத, அடிப்படைவாத அமைப்புகளை தமது அரசியல் தேவைகளுக்காக ஆட்சியாளர் உருவாக்கினர். பல்வேறு சேனாக்கள் உருவாகி வளர்ந்தது இந்த அரசாங்கத்தின் மடியில்தான். இதன் பிரதிபலன்தான் அண்மைகாலத்தில் தோற்றம் பெற்ற இனவாத, மதவாத வன்முறைகளாகும். எமது நாட்டில் பலசேனாக்களை போன்றே சர்வதேச மட்டத்தில் ஏகாதிபத்தியவாதிகள் "அல்கைதா" போன்ற அமைப்புகளை உருவாக்கி அவற்றை போஷித்து தமது அரசியல் நிகழ்ச்சிநிரலை முன்னெடுத்து வருகின்றனர்.

ஆட்சியாளர் தமது அதிகார இருப்புக்கு சவால்கள் ஏற்படும் போதெல்லாம் இன, மத, குலவாத வன்முறைகளை ஊக்குவித்து பாரிய கலவரங்களை உருவாக்கி அவை கட்டுமீறிச் செல்லும்போது அதை தடுத்து நிறுத்தி தமது அதிகாரத்தை தற்காத்துக் கொள்கின்றனர். தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் இவ்வாறான கைக்கூலிகளே முன்னணியில் இருப்பதை நாம் காண்கிறோம். இந்த கைக்கூலிகளை வழிநடத்துபவர்கள் பின்னால் மறைந்து நிற்கின்றனர். இதன் பின்னணியில் பிற்போக்கு சமூக, பொருளாதார, முறைமையை காணக்கூடியதாக உள்ளது இதனால்தான் முழு இலங்கை சமூகமும் பிற்போக்குவாத சுயநல, சமூக, பொருளாதார, அரசியல், பொறியில் சிக்கி சின்னாபின்னமாகி வருகிறோம். உண்மையில் நாம் எதிர்க்க வேண்டிய தோற்கடிக்க வேண்டிய பல விடயங்கள் உண்டு. அமைச்சர் மேர்வின் சில்வா சமுர்த்தி அதிகாரி ஒருவரை மரத்தில் கட்டினார். இந்த சம்பவத்தை நாட்டின் அனைத்து சமூகப்பிரிவினரும் அமைதியாக பார்த்துக்கொண்டிருந்தனர். அண்மையில் பாடசாலை ஆசிரியை ஒருவர் பகிரங்கமாக முழந்தாளிட்டு அவமானத்தில் கூனிகுறுகி நின்றார். இதை முழு சமூகமும் அமைதியாக பார்த்துக்கொண்டிருந்தது. விளம்பர நிறுவனங்கள் சொற்பவருமானத்திற்காக பல்தேசியக் கம்பனிகள் வஞ்சகத்தனமாக எமது மக்களை சுரண்டி பிழைக்க உதவுவதை முழு சமூகமும் அமைதியாக பார்த்துக்கொண்டிருக்கிறது. இவ்வாறாக அனைத்து துஷ்டத்தனங்களையும் சகித்துக்கொள்ள பழகிவிட்ட சமூகத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால், வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்ற பேதமின்றி அனைத்து விவசாயிகளும் தமது அறுவடைகளை விற்பனை செய்யமுடியாமல் அடிமாட்டு விலைக்கு விற்பனை செய்யும் கொடுமையை இந்த சமூகம் அமைதியாக பார்த்துக்கொண்டிருக்கிறது. அதேபோல் இன, மத, மொழி, பேதங்களுக்கு அப்பால் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்ற பேதமின்றி ஒடுக்கப்பட்ட மக்கள் தாம் பெறும் சொற்ப ஊதியத்தில் தமது அன்றாட வாழ்வை நடத்தமுடியாமல் திணறுவதை இந்த சமூகம் அமைதியாக பார்த்துக்கொண்டிருக்கிறது. நாம் எதிர்க்க வேண்டிய, நாம் தோற்கடிக்க வேண்டிய இந்த கொடூரங்களை அமைதியாக ஏற்றுக்கொள்ளும் எம்மால், பேசும்மொழி பின்பற்றுகின்ற கலாச்சாரம், வணங்குகின்ற மத வேறுபாடுகளை சகித்துக் கொள்ள முடியாத படுபிற்போக்குவாத சமூக அமைப்பில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த பிற்போக்குத்தனமான மனப்பாங்கை பயன்படுத்தித்தான் முதலாளித்துவ ஆட்சியாளர் தமது மக்கள் விரோத அரசியல் நிகழ்ச்சிநிரலை வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றனர். ஆட்சியாளர் கையாண்டுவரும் இந்த பொறியில் தொடர்ந்தும் சிக்கி சின்னாபின்னப் படுவதா? அல்லது இந்தப் பொறியில் இருந்து விடுபடுவதா என்பதே ஒடுக்கப்பட்ட சமூகங்களின் முன்னால் உள்ள பிரதான சவாலாகும். "ஏங்கல்ஸ்" கூறினார் சமூகம் தீர்மானகரமான கட்டத்தில் இருக்கிறது அது சோஷலிசப் பாதையில் பயணிப்பதா? அல்லது மிலேச்சத்தனமான முதலாளித்துவ பாதையில் பயணிப்பதா? என்பதை தீர்மானிக்க வேண்டிய கட்டமாகும் "ஏங்கல்ஸ்" இந்த கருத்தினை தெரிவித்தது 100 வருடங்களுக்கு முன்பதாகும் நாம் நூறாண்டுகாலமாக மிலேச்சத்தனமான பாதையில் பயணித்து சீரழிந்து நிற்கிறோம். ஏகாதிபத்திய நாடுகள் உலகை பங்குபோட்டுக் கொள்ள மேற்கொண்ட இரண்டு உலக யுத்தங்களை நாம் கடந்து வந்திருக்கிறோம்.

ஏகாதிபத்திய நாடுகள் தமது பொருளாதார வளத்தை பெருக்கிக் கொள்வதற்காக மத்திய கிழக்கு நாடுகளில் வாழும் மக்களின் உயிர்வாழும் உரிமையை மறுதலித்து பாரிய யுத்தத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளனர். விமான குண்டுத் தாக்குதல்களுக்கு பாலஸ்தீன பச்சிளம் பாலகர்கள் வகை தொகையின்றி பலியாகும் கொடுமைகளை கடந்து பயணித்துக் கொண்டிருக்கிறோம். "ஏங்கல்ஸ்" கூறியதுபோல் மிலேச்சத்தனமான முதலாளித்துவ பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறோம். நாம் வாழும் சமூகத்தில் அனைத்தும், மனித உறுப்புகள்வரை லாபத்தை குறிக்கோளாகக் கொண்ட விற்பனை பண்டமாக கருதும் நவலிபரல்வாத முறைமையின் கீழ் மனிதத்துவததை பாதுகாக்க முடியாது. இன, மத, மொழிவாதத்தை முன்நிறுத்தி சமூகங்களை சரியான பாதைக்கு இட்டுச்செல்ல முடியாது.


இனறு எம்முன் உள்ள சவால்கள் மிகத் தெளிவானதும் கடினமானதுமாகும். பேசும் மொழியால் வணங்கும்














மதத்தால் பிளவுபட்டிருக்கும் மக்களை ஒன்றிணைக்க வேண்டிய கட்டாயம் எம்முன் இருக்கிறது. கடந்தகால வரலாறு பூராவும் வளர்த்தெடுக்கப்பட்ட இனவாத, மதவாத அரசியலுக்கு மக்களை பழக்கப்படுத்தி பிரிவினைக்கு உள்ளாக்க பட்டுள்ளார்கள். எம்முன்னால் உள்ள சவால் மிகப்பெரியது. இந்நாட்டில் பெரும்பான்மையாக வாழும் சிங்கள மொழி பேசும்மக்களை ஆட்சியாளர் இனவாதத்திற்க்கு பலியாக்கி உள்ளனர். அம்மக்களை அந்த பொறியில் இருந்து மீட்கவேண்டிய பாரிய சவால் எம்முன் உள்ளது. அதேபோல் தமிழ்மொழி பேசும் மக்கள் தமது பிரச்சினைகளுக்கு தீர்வுகோரி தமது மொழி, மதம் என்ற குறுகிய வட்டத்துள் சிக்கியுள்ளனர்.அம்மக்களை அந்த இருண்ட குகையில் இருந்து மீட்டெடுக்க வேண்டிய பாரிய சவாலும் எம்முன் உள்ளது. அதேபோல் அனைத்து பிற்போக்கு வாதங்களையும் தோற்கடிக்கவேண்டிய சவாலும் எம்முன் உள்ளது.

எனவே இங்கு கூடியிருக்கும் இனவாத, மதவாத, குலவாதத்திற்கு எதிரான அனைத்து முற்போக்கு சக்திகளும் இங்கு குறிப்பிட்ட அனைத்து சவால்களையும் வென்றெடுக்க ஒன்றிணைந்து செயல்பட முன்வரவேண்டும். இரண்டு கோடிக்கும் அதிகமான சிங்கள, தமிழ் மொழிகளை பேசும் மக்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் பொறுப்பு எம்மீது சுமத்தப் பட்டுள்ளது. எனவே இலங்கை சமூகங்களை மீண்டும் மீண்டும் பேரழிவுக்குள் சிக்காமல் பாதுகாக்க வேண்டியது எம் அனைவரதும் பொறுப்பு. இந்தப்பொறுப்பில் இருந்து எம்மால் விலக முடியாது. இது சாதாரண பிரச்சினையில்லை. பாரிய சமூகப்பிரச்சினையாகும். சிங்கள, தமிழ், முஸ்லிம் அனைத்து சமூகங்களை சார்ந்த அனைத்து மக்களையும் அணிதிரட்டி வெற்றிபெற வேண்டிய பாரிய சமூகப்பிரச்சினையாகும். எனவே சிங்கள, தமிழ், மொழிகளை பேசும்மக்கள் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்ற பேதமின்றி அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களும் ஒரேமேடையில் அமர்ந்திருக்க வேண்டியது கட்டாயமாகும்.

இந்தத் தேவை கருதியே நாம் "சமஉரிமை இயக்கத்தை" ஆரம்பித்தோம். எமது ஆரம்பத்தின் பிரதிபலனே அழுத்கம, பேருவளை, தர்க்காநகர் சம்பவங்களின்போது நாட்டின் பலபாகங்களிலும் எந்த வேறுபாடுகளும் இன்றி புத்திஜீவிகள், பேராசிரியர்கள், மாணவர்கள், கலைஞர்கள், தொழிற்சங்க தலைவர்கள், என பல்வேறு தரப்பினர்களும் இனவாதத்திற்கும், மதவாதத்திற்க்கும் குலவாதத்திற்கும் எதிரான தமது எதிர்ப்பை ஒருமித்த குரலில் எழுப்பியுள்ளனர். இந்த புதிய ஆரம்பத்தை மேலும் மேலும் விருத்தி செய்து புதுயுகம் படைப்போம்.

## அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் தோழர். நஜிக் இந்திக்க.

மீண்டும் ஒரு தடவை மிலேச்சத்தனம் சமூகத்தின் மத்தியில் நடைபயிலத் தொடங்கியுள்ளது. அதேவேளை ஜூலை மாதம் அண்மிக்கையில் மனிதத்துவம் நிறைந்த இன, மத, குலவாதங்களுக்கு எதிரான அணிதிரள்வை "சமஉரிமை இயக்கம்" நிர்மாணித்துள்ளது. ஆனாலும் இந்த நிமிடம்வரை இனவாதம், மதவாதம், குலவாதம் தோற்கடிக்கப்பட்டோ அல்லது முடிவுக்கு கொண்டுவரப்படவோ இல்லை. அது இன்னமும் உயிரோட்டம் உள்ளதாகவே இருக்கிறது. இவ்வாறான சந்தர்ப்பத்தில்தான் நாங்கள் எல்லோரும் இனவாதம்,மதவாதம்,குலவாதத்திற்கு எதிராக அணிதிரண்டுள்ளோம். இந்த அணிதிரள்வானது இனவாதிகளுக்கு சவாலானது. இலங்கையில் மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலும் இன, மத, குலவாதங்கள் மிச்சம் வைத்திருப்பது மிலேச்சத்தனத்தை மட்டும்தான்.

1983 கறுப்பு ஜூலையை அடுத்து நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்து மக்கள் சற்று நிம்மதி பெருமுச்சுவிடும் சந்தர்ப்பத்தில் மீண்டும் ஒரு இனக்கலவரத்தின் தேவை யாருக்கு.? இது தற்செயலாகவோ அல்லது எதிர்பாராமல் ஏற்பட்ட சம்பவம் ஒன்றல்ல. இது ஆட்சியாளர்களின் அனுசரணை பெற்ற இன, மதவாத, அமைப்பின் கைங்கரியமாகும். கடந்த முப்பது வருடகால இனமுரண்பாடு சிங்களவர்களுக்கும் - தமிழர்களுக்குமானது என இனம்காட்டப்பட்டது. தற்போது சிங்களவர்களுக்கும் - முஸ்லிம்களுக்கும் இடையிலான முரண்பாடாக சித்தரிக்கும் முயற்சி நடைபெறுகிறது. கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் இல்லாத முரண்பாடு திடீரென வெளிவந்ததன் பின்னணி என்ன? இதில் ஆச்சரியபட ஒன்றுமில்லை. இது ஆட்சியாளரின் தேவைக்கேற்ப உருவாக்கப்பட்ட ஒன்றாகும். 2012இல் தம்புள்ள பள்ளிவாசலில் ஆரம்பித்து ஹலால் பிரச்சினைவரை வளர்ந்து, இறுதியில் அபசரண வரை விரிவடைந்து பெரும் வன்முறையாக வெடித்திருக்கிறது. பொதுபலசேனா, சிங்கள ராவய போன்ற அமைப்புகளினால் முன்னெடுக்கப்படும் இன,மத, குலவாத வன்முறைகளுக்குப் பின்னால் அரசாங்கம் இருக்கிறது. இதனை நாட்டுமக்கள் நன்கு அறிவர்.

ஆட்சியாளர்கள் முன்னெடுக்கும் மக்கள்விரோத நவலிபரல்வாத அரசியல், பொருளாதார, செயல் திட்டங்கள் எதிர்கொள்ளும் சவால்களில் இருந்து தப்பித்துக்கொள்ள அரசாங்கம் கையாளும் தந்திரோபாயமே இன, மத, குலவாத வன்முறைகளாகும். தமது உரிமைகளுக்காக போராடத் தயாராகும் மக்களை ஒருவருக்கொருவரை எதிரிகளாக மாற்றியமைப்பதற்காகவே ஆட்சியாளர் இன, மதவாத கலவரங்களை அடிப்படைவாத அமைப்புகளை பயன்படுத்தி தூண்டி விடுகின்றனர்.

இன்று நாட்டில சுதந்திர கல்வித்துறை, சுதந்திர சுகாதார துறை, விவசாயிகளின் விதை உரிமம், ஒடுக்கப்பட்ட மக்களின் குடியிருப்புகளை அப்புறப்படுத்தி பல்தேசிய கம்பனிகளுக்கும், உள்நாட்டு பெருமுதலாளிகளுக்கும் தாரைவார்த்தல் போன்ற இன்னோரின்ன மக்கள் விரோத நடவடிக்கைகள் தீவிரம்பெற்று வருகின்றன.இந்த நடவடிக்கைகளில் இன, மத, வேறுபாடுகள் பின்பற்றப்படுவதில்லை. இவற்றுக்கு எதிராக ஒன்றிணைந்த மக்கள் போராட்டங்களை முளையிலேயே தோற்கடிக்கும் தேவையை முன்னிட்டே இனவாத, மதவாத, குலவாத வன்முறைகளை தூண்டிவிடும் தந்திரோபாயங்களை அரசாங்கங்கள் கையாண்டு வருகின்றன. இந்த நடைமுறை உண்மையை விளங்கிக் கொண்டு ஒடுக்கப்பட்ட மக்கள் இன, மத, மொழி வேறுபாடுகளை ஓரங்கட்டி "நாங்கள் மனிதர்கள்" என்ற அடிப்படையில் ஒன்றிணைய வேண்டும்.

"சமஉரிமை இயக்கம்" ஆரம்பித்துள்ள இனவாதம், மதவாதம், குலவாதத்திற்கு எதிரான போராட்டம் பல சவால்களுக்கு மத்தியில் முன்னேற்றகரமாக செயற்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

## கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வட இலங்கை முக்கியஸ்தர் ஏ.எம். சி.இக்பால் ஆற்றியஉரை.

ஜுன்15ஆம் திகதி பேருவளை, தர்காநகர், அளுத்கம, வெளிப்பனை போன்ற இடங்களில் பரம்பரை பரம்பரையாக வாழும் முஸ்லிம் மக்கள் தாக்கப்பட்டும், அவர்களது வீடுகளும், கடைகளும் கொள்ளையிடப்பட்டு எரியூட்டப்பட்டது மூன்று பள்ளிவாசல்கள் உடைக்கப்பட்டதுடன் நான்குபேர் கொல்லப்பட்டுள்ளனர். சிறிய எண்ணிக்கையான அங்கத்தவர்களை கொண்ட பொதுபலசேனாவினர் மிகப்பெரிய கலவரத்தை பேருவளை பிரதேசத்தில் நடாத்தியுள்ளனர். **L.T.T.E** இயக்கத்தை தோற்கடித்த இந்த அரசுக்கோ முப்படைகளுக்கோ அஞ்சாமல் இந்த வன்முறையை அரங்கேற்றியுள்ளனர்.

ஜனாதிபதியும்,. பாதுகாப்பு செயலாளரும் நாட்டில் இல்லாத சந்தர்ப்பத்தில் இந்த வன்முறை அரங்கேற்றப்பட்டுள்ளது. பொலிஸ் மா அதிபர் இந்த இனக்கலரத்தை தடுத்து முஸ்லிம்களை பாதுகாப்பதற்கு பதிலாக நடப்பவைகளை அமைதியாக பார்த்துக்கொண்டிருந்தார். மறுபுறமாக ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்தி முஸ்லிம்களை பள்ளிவாசல்களுக்குள் கட்டுப்படுத்தி வன்முறையாளர்களை சுதந்திரமாக செயல்பட இடமளித்தார். இச் செயல்பாடானது 1983 ஜூலை கலவரத்தை நினைவு கூர்கிறது. அச்சோக சம்பவம் நிகழும்போது ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் **U.N.P** அரசும் ஐந்து, ஆறுநாட்கள் கைகட்டி வாய் பொத்தி பார்த்துக்கொண்டிருந்தர். பேருவளை சம்பவம் ஜனாதிபதியும் பாதுகாப்பு செயலரும் நாட்டில் இல்லாதபோது நடந்தாலும் பிரதமரும், 100க்கும் மேற்பட்ட ஆளும்கட்சி உறுப்பினர்களும் பெரும் எண்ணிக்கையிலான அமைச்சர்களும் முப்படைகளின் தளபதிகளும் பொலிஸ் மா அதிபரும் நாட்டில் இருக்கையில் இக்கலவரம் நடந்துள்ளது. பொதுபலசேனா ஊர்வலம் போகவும் கூட்டம் நடாத்தவுமே தாம் அனுமதி வழங்கியதாகவும், ஆனால் கலவரம் ஏற்பட்டு ஆட்கள் கொலை செய்யப்பட்டு, வீடுகள், கடைகள் சூறையாடி எரியூட்டும் அளவிற்கு அழிவுகளை முஸ்லிம்களுக்கு ஏற்படுத்துவார்கள் என நான் நினைக்கவில்லை என பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். சிங்கள மக்கள் மத்தியிலான புத்திஜீவிகள் பொதுபலசேனாவின் இன,மதவாத வன்முறையை எதிர்த்து பத்திரிகைகளில் கண்டன அறிக்கைகளை வெளியிட்டும், கூட்டங்கள், ஊர்வலங்களை நடாத்தியும் முஸ்லிம்களுக்கு தமது ஆதரவை தெரிவித்தனர். ஜுன் 18ஆம் திகதி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் முன்பாக "சமஉரிமை இயக்கமும்", "முன்னிலை சோஸலிசக் கட்சி"யும் இணைந்து முஸ்லிம்களுக்கு எதிரான பொதுபலசேனாவின் வன்முறைகளை கண்டித்து பாரிய ஆர்ப்பாட்டத்தை நடாத்தினர்.


பொதுபலசேனா, ஹெலஉரிமைய, இராவணாசக்தி போன்ற இயக்கங்கள் இந்த நாட்டில் பௌத்தத்திற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது, அதை பாதுகாக்க யாருமில்லை, நாம் பௌத்தத்தை பாதுகாக்கவே செயல்படுகிறோம் என கூறுகிறுார்கள். இந்நாட்டில் ஏழுபத்திஐந்து விகிதமான மக்கள் சிங்கள பௌத்தர்கள். நாட்டின் அரசமொழி சிங்களம் அரசமதம் பௌத்தம் கடந்த 66 வருட காலமாக ஆட்சி செய்துவரும் அரசாங்கங்கள் எல்லாம் மல்வத்தை மகாநாயக்க தேரர்களின் ஆசிபெற்றுத்தான் ஆட்சிசெய்து வருகிறார்கள். நாடுபூராவும் உள்ள பௌத்த விகாரைகளில் 10,000க்கும் மேற்பட்ட பௌத்த பிக்குகள் மக்களுக்கு தர்மஉபதேசம் செய்துவருகிறார்கள். பெரும்பான்மையான சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள், முப்படைகளின் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் ஆகியோர் பௌத்தர்களாகவே உள்ளனர். எனவே சிறு எண்ணிக்கையான உறுப்பினர்களை கொண்டுள்ள பொதுபலசேனா பௌத்தத்துக்கு ஆபத்து என கூறுவது கேலிக்கிடமானது. இதிலிருந்து விளங்கி கொள்ளக்கூடிய உண்மைதான் ஒருசிலரின் தனிப்பட்ட நலன்களுக்காக செயல்படும் நிறுவனமே பொதுபலசேனா என்பதாகும்.

# ஒரு தளராத உறுதிகொண்ட போராளி—தோழர் தங்கவடிவேல்

தரப்படுத்தல் கண்டு தனி நாடு கேட்டு ஆயுதத்தோடு கொதிந்தெழுந்த வடக்கிலே தனிக்குவளை, சிரட்டையில் தேநீர், கிணற்றில் நீரைக் கூட வாளியால் மொள்ளக் கூடாது, உயர் சாதியினருக்கு முன்னால் தோளிலிருக்கும் சால்வையை மடித்து கமக்கட்டுக்குள் செருகியாக வேண்டும், விவசாயக் கூலிப் பெண்கள் மார்புகளை மறைக்க குறுக்குக்கட்டு அணிய வேண்டும், வள்ளியம்மை என்றோ அல்லது கந்தையா என்றோ பெற்ற குழந்தைக்கு பெயர் வைத்தால் வள்ளி என்றும் கந்தன் என்றும் சாதிக்குறியீட்டுக்காக பெயர்கள் மாற்றி பதியப்பட்டும், இன்ன இன்ன சாதி இன்ன இன்ன ஊர்களில் குறிச்சிகளில் என்றும், தப்பித்தவறி சாதிவிட்டு சாதி காதல் கொண்டால் கடலிலோ, குளத்திலோ கிணற்றிலோ அடித்தே கொலை செய்து வீசப்பட்டு, வழக்குகள் நீதிமன்றுகளில் அப்புக்காத்துக்களால் தள்ளுபடியாக்கப்பட்டும், ஆலயங்களும் அங்கு குடிகொண்டிருக்கும் கடவுளர்கள் கூட சாதிகளுக்கென்றும், பள்ளிக்கூடங்களில் நீ பள்ளனா பறையனா என்றும், முத்தன், கந்தன் என்ற பெயரைக் கண்டால் மூட்டை சுமக்கப் போகாமல் நீ எதற்கடா வகுப்பறையில் முன் வாங்கில் அமர வேண்டும் என பாடம் நடாத்தும் சாதித்துவேசம் மிக்க "முத்துக்குமாரசாமி" வாத்தியாயர்கள் என இன்னும் பற்பல சாதிக்கொடுமைகளை ஒடுக்குமுறைகளை தமிழ்த் தேசிய சாதிமான்கள் தங்கள் புறங்காலால் ஒதுக்கிவிட்டு தங்களது தங்கப் பிள்ளைகளின் பல்கலைக்கழக வாய்ப்பு பறிபோய் விட்டதே என்று வெண்கலக் குரல்களில் வீராவேச வசனம் பேசி அணிகளைத் திரட்டி ஆயுதப் போரினை மூட்டினர்.

அவ்வழி வந்தவர்கள் தலைமுறையில் ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள் மட்டுமே இன்று வீர புருஷர்களாகவும், மாவீரர்களாகவும், போராளிகளாகவும் வரலாற்றில் தனித்து முன்னிறுத்தப்படுகின்றனர். இவர்கள் எல்லாம் தமிழ்த்தேசிய வீரர்களாக மலர முன்னரே தமதன்னையரில் கருவில் உருக்கொள்ள முன்னரே, நவீன போர்க்கருவிகளோடு துப்பாக்கிகளோடு, நவீன தகவல் பரிமாற்ற சாதனங்களோடு, பணபல, ஊடகப் பராக்கிரமங்களோடு நிலம் நடுங்க, உயிர்கள் இழிய நீண்ட போர் நடாத்துவதற்கு முன்னரே "தமிழர்" என்ற ஒற்றைச் சொல்லுக்குள் சண்டாளப் பேயாக தாண்டவமாடிய சாதியடிமை, குடிமை முறை, தீண்டாமை ஒடுக்குமுறையின் வேருக்கு வெடிகுண்டு வைத்தவர்கள். கரந்தடித்தல் என்னும் கெரில்லா போர்முறைக்கு "தமிழர்கள்" வரமுன்னரே வீதிகளில் தத்துவப் பதாகைகளோடு உயிர்களை நேரிடை மோதல்களில் விட்டெறிய வந்தவர்கள். வாள்களும் உள்ளூர் வெடிகுண்டுகளும் ஒரு சில நாட்டுத் துப்பாக்கிகளும் தவிர வேறு எந்த நவீனங்களும் அவர்களிடம் இல்லை, நெஞ்சில் ஏந்திய விடுதலை வேட்கையைத் தவிர.

மாலைகளையும், மலர்வளையங்களையும், மேளதாள தேர்தல் வெற்றி ஊர்வலங்களையும், வீராவேசப் பேச்சுகளில் சூடேறிய இளைஞர்களின் இரத்தத்தில் நெற்றித் திலகங்களையும் சூடிக்கொண்டோர்களுக்கிடையில், இனமானத்தலைவர்களாக தூ க்கி உயர்த்தப்பட்டவர்களுக்கிடையில், அவமதிப்பையும் அடக்குமுறையையும், அநீதிகளையும், புறக்கணிப்புகளையும் வறுமையையும், தலைமறைவு வாழ்க்கையையும், தியாகங்களையும், போராட்ட அனுபவங்களால் புடம் போடப்பட்ட வரலாற்று நினைவுகளையும் தாங்கி நின்ற எத்தனையோ தோழர்களில் பலர் தமிழ்த்தேசிய ஆயுதப் போராட்டத்தலைமைகளால் நெஞ்சில் துவக்குமுனையால் எதிர்கொள்ளப்பட்டனர். எனினும் எதைக் கண்டும் துவண்டு விடாத அவர்களது நீண்டதும் நெடியதுமான போராட்டமும் அதன் பயனாய் விளைந்த



"தீண்டாமை வெகுஜன இயக்கம், சாதியம், தீண்டாமைக்கெதிராக மக்களைப் போராளிகளாக்கியது. மக்களை பாரிய இயக்கமாக்கியது. வேண்டப்பட்ட போது அவர்களை ஆயுதம் தரிக்க வைத்தது. தனிக்குவளைகளை தூக்கி வீசியது."

சமூகத்தில் பொது இடங்களிலாவது ஓரளவுக்கு தன்னை நாகரீகமாக மறைத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு யாழ் சாதியமுறைமை தன்னை இனங்காட்டாமல் இனமானப் போர்வையைப் போர்த்துக் கொண்டுள்ளது.


போராளிகள் என்ற பதம் தமிழ்த்தேசியத்தால் உச்சரிக்கப்படும் முன்னரே அடிப்படை மனிதத்துக்கு எதிரான அநீதி கண்டு கொதித்தெழுந்து முதல் மூத்த தலைமுறைப் போராளிகளாக, எழுத்தாளர்களாக, தத்துவார்த்த பிரச்சாரகர்களாக எனப் பலமுனையிலும் முறுக்கிய தம்கரங்களையும் முன்னேறிய மார்க்சிய தத்துவத்தின் வெளிச்சத்தினையும் மட்டுமே ஆயுதங்களாகக் கொண்டு சமூகத்தின் முன்னின்றவர்கள் இவர்களே தவிர தேசியம் என்ற பெயரில் ஏகாதிபத்திய அடிமைகளாகவும் ஏவல் நாய்களாகவும் துப்பாக்கி ஏந்திய தலைமைகள் அல்ல.

தீண்டாமை வெகுஜன இயக்கம், சாதியம், தீண்டாமைக்கெதிராக மக்களைப் போராளிகளாக்கியது. மக்களை பாரிய இயக்கமாக்கியது. வேண்டப்பட்ட போது அவர்களை ஆயுதம் தரிக்க வைத்தது. தனிக்குவளைகளை தூக்கி வீசியது. ஆலயங்களில் உள்ளிட போராடியது. பல்வேறு சமூக கலாச்சார ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக உயர்சாதி மக்களிடையிலும் தனது ஆதரவை பெற்றுக் கொண்டு ஓரணியில் போராட்டங்களில் இணைத்து உறுதியான இடைவிடாத போராட்டங்களை நிகழ்த்தியது. மறுபுறத்தில் அதிகார மட்டத்தில் அரசியல் மட்டத்தில் சாதிப் பெரியோர்களை ஆக்ரோசமாக சாடி போர்க்கொடியோடு போராடியது. இத் தீண்டாமை இயக்கத்தின் தீரமிக்க போராளிகளில் ஒருவராக தன்னை அர்ப்பணித்தவர் தான் தோழர் தங்கவடிவேல் மாஸ்ரர்.

"தம்பிகளா ஒடுக்குமுறையென்ற சமுத்திரத்தின் மேல் கப்பல் கட்டி மிதந்துகொண்டு போராடுகின்றவர்களுக்கு, அச்சமுத்திரத்தின் மூச்சிழுக்க முடியாத அடியாழத்தில் மேலுள்ள சமுத்திர நீரின் அமுக்கத்தையும் அதிகமாக சுமந்து கொண்டு போராடுகின்றவர்களை காண முடியாது தான். பலவிதமான சோர்வுகள், அவமதிப்புக்கள், அவதூறுகள், ஒதுக்கிவைத்தல், முரண்பாடுகள், அமைப்புத் தோழர்களின் தத்துவார்த்த நடைமுறை விலகல்கள், உயிராபத்து, அச்சுறுத்தல், குடும்பம் சுற்றங்கள் உறவுகளுக்கு கூட வேண்டாதவர்களாதல் என்ற பல இடர்ப்பாடுகளையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதை நீங்கள் அறிந்திருங்கள்" என்பது அவருடனான முதல் சந்திப்பில் அவர் புதிய ஜனநாயக மக்கள் முன்னணித் தோழர்களோடு பகிர்ந்து கொண்ட வார்த்தைகள். தன்னுடைய வயோதிபத்தின் வாசலுக்கு வந்த பின்னரும் மிகுந்த உற்சாகத்தோடு கலந்துரையாடல்களிலும், அரசியல் கூட்டங்களில் கலந்து கொண்ட அவர், ஒரு தளராத உறுதி கொண்ட போராளி என்பதை பதிவு செய்கிறோம். ஆனால் அவருடன் தொடர்ச்சியாக உரையாடுவதற்கென ஏற்படுத்திக் கொண்ட நிகழ்ச்சிநிரல் ஆரம்பிப்பதற்கு முன்னர் அவருடைய அனுபவத்தை தொகுக்கு முன்னரே அவர் காலமாகிவிட்டதென்பது ஒரு பேரிழப்பு.

தோழர் தங்கவடிவேல் மாஸ்ரருக்கு புதிய ஜனநாயக மக்கள் முன்னணி தனது செவ்வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறது.

> “தென் - ஆபிரிக்கா, நிறவாத ஒடுக்குமுறையிலிருந்து மீண்டபோது உருவாக்கிய "உண்மையைக் கண்டறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு" போன்ற ஒரு விசாரணைப் பொறிமுறையை இலங்கையிலும் உபயோகிக்கலாம் எனத் தீர்மானித்தது.”



# புலிகள், தென் ஆபிரிக்கா, மஹிந்த அரசு ... உபஜனாதிபதியின் இலங்கை விஜயம் எதற்காக?

கடந்த மாதம் (07.07.2014) அன்று தென்னாபிரிக்காவின் உப ஜனாதிபதி சிறில் ராமபோசா இலங்கைக்கு 24 மணிநேர விஜயத்தை மேற்கொண்டிருந்தார். அவரது இலங்கைக்கான விஜயம் சம்பந்தமாக ”தமிழ்தரப்பிலிருந்தோ” அல்லது இலங்கை அரசதரப்பிலிருந்தோ தெளிவான எந்தக் கருத்தும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

சர்வதேசத் தலைவர்கள் வடக்குக்கு விஜயம் செய்யும்போது போராட்டங்களை நடாத்தும் முன்னாள் புலிப்பிரமுகர்களையோ, அல்லது அவர்களின் ஒப்பாரி வைத்து மாரடிக்கும் போராட்டக்காரர்களையோ சிறில் ராமபோசா யாழ்ப்பாணம் சென்றபோது காணக்கிடைக்கவில்லை. இங்கிலாந்தின் பிரதமர் கடந்த வருடம் யாழ்ப்பாணம் வந்தபோது நடந்த நாடகத்தனமான குரவைகளும், அழுகைகளும்,போராட்டங்களும் இலகுவாக மறைக்கக் கூடியதல்ல. ஆனால், இங்கிலாந்தின் பிரதமரை விட அதி முக்கியமான ஆபிரிக்க உப ஜனாதிபதியின் வருகையின் போது ”தமிழ் தரப்பினரால்” அமைதிகாக்கப்பட்டது.

அதேபோல, இலங்கையின் அரச ஊடகங்களும் அல்லது அதன் பிரச்சாரப் பீரங்கிகளான அமைச்சர்களும் கூட சிறில் ராமபோசாவின் வருகைபற்றி பெரிதாக அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை. மஹிந்த மலம் கழிக்கச் சென்றாலும் அதுபற்றி அரசியல் விளக்கங் கொடுக்கும் ஜனாதிபதியின் செய்திப் பிரிவு, ”சிறில் ராமபோசா அலரிமாளிகையில், விருந்திற் பங்கு கொண்டார்” என்ற குறுஞ்செய்தியை மட்டுமே வெளியிட்டது. அவ்விருந்தில் இரு தலைவர்களும் அரசியல் பேசவில்லையா என்று, பிரச்சாரப் பீரங்கியான அரசின் அதிகாரப்பூர்வ பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெலவிடம் வினவியபோது ”அவர்கள் கதைத்தது தனிபட்ட விடயங்கள் பற்றியே. ஆகவே சந்திப்பின் உள்ளடக்கம் ”பிரைவேற்” ஆனது, என்று பதிலளித்தார்.

”அப்படியானால் சிறில் ராமபோசா, இலங்கைக்கு உல்லாசப்பயணமாகவா வந்தார் ” என்று கெஹெலிய ரம்புக்வெலவிடம் நிருபர் ஒருவர் வினவியதற்கு மவுனமே பதிலாகக் கிடைத்தது.

### ராமபோசாவின் வருகையின் பின்னணி

ராமபோசா, இன்று தென் ஆபிரிக்காவின் ஜனாதிபதியான ஜேகப் சூமாவிற்று மிக நெருக்கமானவர். 2019 இல் நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் ராமபோசா தான் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடவுள்ளார். இன்றைய தென் ஆபிரிக்க அரசியற் சூழலைக் கவனிப்பவர்களுக்குத் இது தெரியும், அந்நாட்டின் அடுத்த ஜனாதிபதி சிறில் ராமாபோசா தான் என்பது. இன்று உலகில் கைவிட்டு எண்ணத்தக்க பொருளாதர வளர்ச்சி கொண்ட நாடுகளில் தென் ஆபிரிக்காவும் மிக முக்கியமானது. அதனால் சர்வதேச முக்கியத்துவமும் அதற்கு வளர்ந்து வருகிறது.

இந்நிலையில், அந்நாடு தனது மிக முக்கியமான பிரதிநிதியை ஏன் இலங்கைக்கு அனுப்பி வைக்கவேண்டும்?

கடந்த வருடம் இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடந்த போது பெரும்பாலான தமிழ் மக்களுக்கு நினைவில் இருப்பது இங்கிலாந்தின் பிரதமர் யாழ்ப்பாணம் வந்ததும், அங்கு நடந்த போராட்டங்களும் தான். ஆனால், தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கக் கூடிய மிக முக்கிய நிகழ்வுகளும் அம் மாநாட்டுப் பின்னணியில் நடைபெற்றது.



யுத்தத்தின் பின்னான சில வருடங்களாக சர்வதேச நெருக்கடிகள் இலங்கை அரசுக்கு இருந்து வருகிறது. கடந்த வருட பொதுநலவாய மாநாட்டில் அது கொஞ்சம் கூடுதலாகவே இருந்தது. அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணையைத் தடுக்க வேண்டிய தேவையும் இலங்கை அரசுக்கு இருந்தது. அதனால் தென் - ஆபிரிக்கா, நிறவாத ஒடுக்குமுறையிலிருந்து மீண்டபோது உருவாக்கிய ”உண்மையைக் கண்டறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு” போன்ற ஒரு விசாரணைப் பொறிமுறையை இலங்கையிலும் உபயோகிக்கலாம் எனத் தீர்மானித்தது. இத்தீர்மானம் உண்மையாகவே ” ”உண்மையைக் கண்டறிய ” பயன்படா விட்டாலும் தந்திரோபாய ரீதியில் தனக்கு சாதகமான சர்வதேசச் சூழலை உருவாக்கும் என இலங்கை அரசு நம்பியது.

2013ம் வருடம் நவம்பர் மாதம், தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேகப் சூமா பொதுநலவாய மாநாட்டுக்கு இலங்கை வந்த போது ”உங்கள் நாட்டு அனுபவத்தை எங்களுடன் பகிர்ந்து கொண்டு, எங்கள் நாட்டு பிரச்சினையை தீர்க்க உதவுங்கள்” என அவரிடம் கோரிக்கை விடுத்தார், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. அதற்குப் பிறகு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் ஒரு குழு, 2014ம் வருடம் பெப்ரவரி மாதம் தென்னாபிரிக்கா சென்று அந்நாட்டு அரசுடன் இதுபற்றி மேலும் பேச்சுவார்த்தை நடத்தியது. இந்தப் பின்னணியிலே தான் தென்-ஆபிரிக்க அரசு பிரதிநிதியாக கடந்தமாதம் சிறில் ராமபோச இலங்கையின் உள்நாட்டு தேசிய முரண்பாட்டை தீர்க்க வகை செய்யும் தூதுவராக இலங்கைக்கு வந்தார். இவ்வாறு,நாட்டில் தீர்க்கப்படாத பிரச்சனையாக இருந்துவரும் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு தீர்வு காண இலங்கை ஜனாதிபதியால் அழைக்கப்பட்ட சிறில் ராமபோஷாவை, அவர் ஏதோ தனிப்பட்ட அலுவல்களுக்காக அல்லது சுற்றுலாப்பயணி போல் வந்தார், என்பது போல இலங்கை அரசு காட்டிக் கொண்டது.

### உள் வீட்டு அடிதடி

மஹிந்த அரசானது தேசியப்பிரச்சனையைத் தீர்க்க, ஒரு வெளிநாட்டை தானே மூன்றாவது தரப்பாக அழைத்து விட்டு, இப்போ தேள் கொட்டிய திருடன்போல முழிப்பது, அதிகார வர்க்கத்துக்குள் எழுந்துள்ள முரண்பாடுகளாளே காரணமாகும். மஹிந்த அரசுக்கு முண்டு கொடுக்கும் பேரினவாதச் சக்திகளான விமல் வீரவன்ச மற்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சியுமே மஹிந்த அரசுக்கு, தென் - ஆபிரிக்காவின் தலையீட்டை முன்வைத்துத் தலையிடி கொடுக்கின்றனவென்பது சொல்லித் தெரியவேண்டியதல்ல. தென்- ஆபிரிக்காவின் தலையீடு,தம்முடன் செய்து கொண்ட அரசியல் உடன்படிக்கையை மீறுவதாகுமென மேற்படி இரு கட்சிகளும் கண்டனம் தெரிவித்துள்ளன. அத்துடன் விமல் வீரவன்ச, தொடர்தும் தனது ஆதரவு மகிந்தவுக்குத் தேவை என்றால், மஹிந்த 12 நிபந்தனைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென கோரிக்கை வைத்துள்ளார். இந்த உள்வீட்டு இழுபறி காரணமாகவே, சிறில் ராமபோசாவின் வருகை பற்றிய விபரங்கள் மஹிந்த அரசாலும், அதன் பிரச்சார இயந்திரங்களாலும் அமுக்கி வாசிக்கப்பட்டன.

ஆனாலும், மஹிந்த அரசானது மேற்படி விமல் வீரவன்ச போன்றவர்களில் மிரட்டல்களுக்குப் பணிந்து போவதாக தெரியவில்லை.

இலங்கை அரசானது ஐக்கிய நாடுகள் சபையின் யுத்தமீறல் பற்றிய விசாரணையை அங்கீகரிக்க மறுத்துள்ளது. இதனால், சர்வதேச விசாரணைக் குழுவையும் நாட்டுக்குள் வர அனுமதிக்கப்படமாட்டாதெனவும் அறிவித்துள்ளது. இந்நிலையில், தென்-ஆபிரிக்க தரகு ஊடாக நடாத்தப்படும் ”தமிழ் தரப்புடனான” ஒரு பேச்சுவார்த்தை மற்றும் ”உண்மையைக் கண்டறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு” ஒன்றை உருவாக்குதல் மூலமும், ஐக்கிய நாடுகள் சபையின் யுத்தமீறல் பற்றிய விசாரணையிலிருந்தும் - அதனால் வரக்கூடிய பாதகமான சர்வதேச விளைவுகளிலுமிருந்து தப்பிக்கலாம் என அரசு கருதுகிறது. இதனாலேயே, மஹிந்த அரசானது தென்-ஆபிரிக்க தரகு ஊடாக இனப்பிரச்சனையைக் கையாள்வதே ஒரே ஒரு தனக்குச் சாதகமான வழிமுறை என்பதில் உறுதியாகவிருந்து வருகிறது.

### புலிகளும் - தென் ஆபிரிக்காவும்

தென் -ஆபிரிக்கா இலங்கையின் இனப்பிரச்னையில் தலையிடுவதொன்றும் ஆச்சரியப்படத்தக்க விடயமல்ல. புலிகள் இருந்தகாலத்திலும், 2009- போரின் அழிவுகளுக்குப் பிற்பாடும் தமிழ் மக்களுக்குச் சார்பான கருத்துகளை தென் - ஆபிரிக்க அரசியல்வாதிகள் சர்வதேசத்தளத்தில் வெளியிட்டு வந்தனர். யுத்தத்தில் உயிர் தப்பிய பல நூறு போராளிகள் தென் - ஆபிரிக்காவில் தங்கி இருப்பதாகவும், புலிகளின் பல்லாயிரம் கோடி ரூபாய்கள் அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகவும் இன்றுவரை கூறப்படுகிறது. கடந்த வருட இறுதியில், போராளிகளையும், பணத்தையும் கைப்பற்ற கோத்தபாய முன்னெடுத்த முயற்சிகள் அனைத்தும் தென் - ஆபிரிக்கா அரசால் திட்டவட்டமான முறையில் மறுக்கப்பட்டதாகாவும் தகவல்கள் வெளியாயின.

தென் - ஆபிரிக்காவில் புலிகளின் நிதிகளும் போராளிகளும்,**GTF** - குளோபல் தமிழ் போரம்,**BTF**□ பிரிட்டிஸ் தமிழ் போரம், மற்றும் -குறிப்பாக நோர்வேயில் இயங்கும் நெடியவன் தலைமையிலான புலிகளின் புலம்பெயர் முன்னணி அமைப்புகளால் நிர்வகிக்கப்படுகிறது. இவ்வமைப்புகளின் ஆங்கிலம் தெரிந்த, மனிதாபிமான, சர்வதேச முகமாக இருப்பவர்தான், கத்தோலிக்க திருச்சபையின் பாதிரியான அருட்திரு. இம்மானுவேல் அடிகளாவார். இவர்தான் தனது கத்தோலிக்க திருச்சபையின் வலைப்பின்னல் ஊடாக ஆபிரிக்க தேசிய காங்கிரசுடன்(**ANC** )புலிகளுக்கு உறவை ஏற்படுத்திக் கொடுத்தவர். இதன் அர்த்தமாகப்பட்டது புலிகள் செய்த சர்வதேச அடாவடித் தனங்களுக்கு அருட்திரு. இம்மானுவேல் அடிகளார் பொறுப்பு என்பதல்ல. ஆனால், ஆரம்பத் தொடர்புகளை அவரே ஏற்படுத்திக் கொடுத்தார் என்பது மட்டுமே உண்மை.

நெடியவன், இம்மானுவேல்,தென் - ஆபிரிக்க அரசு...

முள்ளிவாய்க்கால் அவலங்களின் பின், தமிழினப் பிரச்சனையைத் தீர்ப்:பதற்கான வழியையும் - இலங்கை அரசின் போர்க்குற்ற விசாரணயை நடத்துவதற்கான பொறிமுறையைக் கோரியும் பல கருத்துகள் முன் வைக்கப்பட்டது. ஆரம்பத்திலேயே, தென் - ஆபிரிக்கா முறையிலான ”உண்மையைக் கண்டறிளுதல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு” ஒன்றை அமைக்கவேண்டுமென்ற கோரிக்கையை தமிழர் தரப்பில் முன் வைத்தவர்கள், அருட்திரு. இம்மானுவேல் அடிகளார் ஊடாக **GTF** - குளோபல் தமிழ் போறும், **BTF** பிரிட்டிஸ் தமிழ் போரம் போன்ற அமைப்புகளேயாகும். இம்மானுவேல் அடிகளார் ஊடாக முன்வைக்கப்பட்ட தென் - ஆபிரிக்கா முறையிலான பொறிமுறைக் கோரலை நெடியவனின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும் **NTF** -நோர்வேஜியன் தமிழ் போரம் எதிர்த்தே வந்தது. அவ் எதிர்ப்பானது, மேலே கூறியபடி கடந்த வருடத்தில்,

14 ஆம் பக்கம் பார்க்க...










# விளங்கிக் கொள்ளாவிட்டால் விலகிக் கொள்ளட்டும்!

பெருமரம் சரிந்து விழும் போது வீராதிவீரன் வாத்தியார் வந்து முதுகைக் கொடுத்து மரத்தை தூக்கி நிறுத்தி மக்களைக் காப்பாற்றுவார். விசிலடித்து அவர் வீரம் விதந்து தமிழ்நாட்டினது முதலமைச்சர் பதவியையே தூக்கி அவரின் பாதத்திற்கு காணிக்கையாக்குவோம். கண் தெரியாத தங்கச்சி மேல் கார் மோதி இரத்த வெள்ளத்தில் துடித்துக் கொண்டிருப்பார். (தங்கச்சியின் பெயர் அனேகமான படங்களில் சாந்தி என்று இருக்கும்). அண்ணன் சிவாஜி ஓடி வந்து ஒரு வயதில் தங்கச்சிக்கு தாலாட்டு பாடினது, இரண்டு வயதில் கை பிடித்து நடை பழக்கியது, மூன்று வயதில் மூக்கு துடைத்து விட்டது என்று மூச்சு இரைக்க இரைக்க அரைமணி நேரத்திற்கு அழுது புலம்புவார். ஏற்கனவே பாதி உயிர் போயிருக்கும் தங்கச்சி சிவாஜியின் முகத்தை குளோஸ் அப்பில் பார்த்த அதிர்ச்சியில் மீதி உயிரையும் விடுவார். "இவனல்லோ நடிகன்" என்று கண்ணைக் கசக்கியபடி தமிழின் தலை சிறந்த நடிகன் என்ற பட்டத்தைக் கொடுப்போம்.

தமிழ்ப்பெண் என்று காட்சிப்படுத்தப்படும் தமிழ்ப்படக்கதாநாயகி ஜப்பானிய சுமோ வீரன் எதிராளியோடு போய் மோதுவது போல, கதாநாயகனை பெருமார்பு கொண்டு மோதுவது தமிழ்ப்பெண்ணின் காதலாக காட்டப்படும். எந்த நேரமும் மாமா என்றோ, மச்சான் என்றோ அசடு வழிந்து கொண்டு ஆணின் பின்னால் திரிந்து அவனிடம் காதல் பிச்சை கேட்பது தான் தமிழ்ச்சினிமாவில் காட்டப்படும், தமிழ்ப்பெண்ணின் வாழ்வின் இலட்சியம் என்று கொச்சைப்படுத்துவார்கள். அண்ணன் அட்டைக்கத்தியால் போட்ட சண்டைக்கு முதலமைச்சர் ஆக்கியவர்கள், அண்ணி அண்ணனோடு போட்ட சுமோ சண்டைக்காக அண்ணியையும் முதலமைச்சர் ஆக்கி நன்றிக்கடன் தீர்த்தோம்.

உழைக்கும் மக்களின் பெயர்களான சங்கிலி, மாடசாமி போன்ற பெயர்கள் கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு செய்யும் கொடூர வில்லன் நடிகர்களிற்கு வைக்கப்படும். சிவப்பான கதாநாயகர்களிடம் இந்த கறுப்புத்தமிழர்கள் அடிவாங்கி சாவார்கள். இப்படி தமிழரை தமிழ் வாழ்க்கையை கேவலப்படுத்தும், கொச்சைப்படுத்தும் தமிழ்சினிமாவை பார்க்கும் போது நமது "தமிழ் உணர்வாளர்களின்" மீசை துடிப்பதில்லை. இப்படி கேவலப்படுத்தும் நடிகர்களையோ இயக்குநர்களையோ உணர்வாளர்கள் கேள்வி கேட்பதில்லை. தமிழ்ப்படம் என்னும் கேலிக்கூத்தின் தரம் பற்றி இவர்களிற்கு கவலை பிறப்பதில்லை.

பிரசன்ன விதானகே என்னும் கலைஞன், இலங்கையின் முற்போக்கு சக்திகளின் ஆதரவாளன், இலங்கைத் தமிழ்மக்களின் துயரங்களை, சிங்கள மக்களின் வறுமையை, இலங்கை ஆளும் வர்க்கத்தினரின் அநியாயங்களை தன் படைப்பு மூலம் யதார்த்தமாக கலையழகுடன் பேசுவது இவர்களிற்கு பிரச்சனையாக இருக்கிறது. பிரசன்ன விதானகே வணிக சினிமா எடுத்து தன் வாழ்வை வளமாக்கியிருக்கலாம். இலங்கை அரசாங்கத்திற்கு பிரச்சனை ஏற்படுத்தாத படங்களை எடுத்திருக்கலாம். ஆனால் அவர் ஒரு உண்மையை பேசுகிற கலைஞன். அதனால் அவரின் படங்கள் அவருக்கும், அவரின் தயாரிப்பாளர்களிற்கும் நட்டத்தையும், நெருக்கடிகளையுமே கொடுத்திருக்கின்றன. அவரின் படங்கள் இலங்கையில் தடை செய்யப்பட்டன. பின்பு வழக்கு வைத்து தடையை விலக்கிக் கொண்டார்.

ஆனால் சில தொலைபேசி அழைப்புக்கள் மூலம் தமிழ்நாட்டிலேயே படம் ஓட முடியாமல் செய்ய முடியுமென்றால், இலங்கை அரசு போன்ற ஒரு பயங்கரவாத அமைப்பினால் என்ன தான் செய்ய முடியாது. "பிறகு" திரைப்படம் ஒரு சில முறைகள் மட்டுமே இலங்கையில் திரையிடப்பட்டது. அதன் பிறகு அத்திரைப்படத்தை திரையிடுவதற்கு எந்த திரையரங்க உரிமையாளர்களிற்கும் துணிச்சல் இருக்கவில்லை.

இப்படியான ஒரு கலைஞனையும் அவனது படத்தையும் தான் இலங்கை அரசிற்கு சார்பானது என்று அவதூறு சொல்கிறார்கள். இதிலே இந்தப் படம் உலகத்தரத்திற்கு இல்லை என்று காமடி வேறு பண்ணுகிறார்கள். கமல் சார், ரஜினி சார், சங்கர் சார் என்று அப்பட்டமான வியாபாரிகளை தூக்கிப் பிடிப்பவர்கள் கலை என்பது கடுகளவு கூட இல்லாத படங்களை பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக பாராட்டி எழுதுபவர்கள், தரம் பற்றி பேசுகிறார்கள். புதிய தலைமுறை நிகழ்ச்சியில் பேசிய நாம் தமிழர் அமைப்பைச் சேர்ந்தவர் "பிறகு" திரைப்படத்தின் தரத்தைப் பற்றி பேசியது தான் இந்த வருடத்தின் கண்றாவி காமடியாக இருந்தது. முதலில் நாம் தமிழரின் தலைவர் சீமானை குறைந்தபட்சம் ஒரு மலையாளப்படத்தின் தரத்திற்காவது ஒரு படத்தை எடுக்கச் சொல்லி விட்டு பின்பு மற்றவர்களை தரமாக படம் எடுப்பது எப்படி என்று பாடம் நடத்தலாம்.

தன் திரைப்படமொழி மூலம் இனப்பிரச்சனை தமிழ், சிங்கள மக்களின் உறவுகள் பற்றி பேசிய பிரசன்ன விதனகேயிடம் இனப்படுகொலை பற்றி என்ன சொல்கிறீர்கள் என்று இவர்கள் கேள்வி கேட்கிறார்கள். பிரசன்ன விதானகே என்ன இலங்கை அரசின் பிரதிநிதியா? பிரசன்ன விதானகே மறுமொழி சொல்வது ஒருபக்கம் இருக்கட்டும். இலங்கைத் தமிழ் அகதிகளை முகாமில் அடைத்து வைத்திருக்கும் ஜெயலலிதாவிடம் அகதிகளை ஏன் அடைத்து வைத்திருக்கிறீர்கள் என்று எப்போதாவது கேட்டிருக்கிறார்களா? பிரபாகரனின் தாய், தந்தையரை தமிழ்நாட்டுக்கு வரவிடக் கூடாது என்று வழக்குப் போட்ட ஜெயலலிதாவின் ஆட்சியில் இலங்கையின் மந்திரிகள் இன்பச்சுற்றுலா வந்து போவதை பற்றி ஜெயலலிதாவிடம் கேட்கும் துணிச்சல் இருக்கிறதா?



சிங்களவர் எடுத்த படம், சிங்களமொழிப் படம் என்று பச்சையான இனவாதம் பேசுகிறார்கள். பிரசன்ன விதானகே சிங்கள உணர்வாளர் என்ற நிலையில் இருந்து என்றைக்குமே படம் எடுத்ததில்லை. மனிதாபிமானத்தையும், யதார்த்தத்தையும் பேசிய படைப்புக்கள் அவருடையவை. இவர்களின் இனவாதப்போக்கின் படியே பார்த்தால் தமிழ் மசாலா படங்களின் தத்துவாசிரியரும், மதியுரைஞருமான எம்.ஜி.ஆர் மலையாளி. இந்த மசாலாக்கள் தமிழனின் மனதையும், மண்டையும் கெடுத்தது மாதிரி வேறெதுவும் கெடுத்ததில்லை. ஆனால் இந்த நாம் தமிழர்கள் எம்.ஜி.ஆரிற்கு வீரவணக்கம் போடுகிறார்கள். ரஜினிகாந்து ஒரு கன்னடன். காவேரிப்பிரச்சனையில் கன்னட வெறியர்களிற்கு எதிராக இவர் வாயே திறப்பதில்லையே என்று, இந்த மறத்தமிழர்கள் பிரசன்ன விதானகேயிடம் கூச்சல் போட்டது போல் ஏன் ஒரு போதும் கூச்சல் போட்டதில்லை.

இலங்கையின் மக்கள் கொடூரமான அடக்குமுறைகளிலிருந்து விடுபட முன்னுள்ள ஒரேவழி ஒடுக்கப்படும் மக்களின் ஒன்றிணைவு மட்டுமே. பிரசன்ன விதானகே போன்ற கலைஞர்களின் படைப்புக்கள் பொதுமக்கள் முன் ஒற்றுமைக்கான தேவையை பேசுகின்றன. தமிழ்மக்களின் மேல் அக்கறை கொண்டவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் இவற்றை விளங்கிக் கொள்ள வேண்டும். விளங்கிக் கொள்ளாவிட்டால் விலகிக் கொள்ளட்டும்.

அளுத்கம - பேருவளையில் அரசின் துணையுடன் காடையர்கள் நடத்திய இன-மத வன்முறையானது, இயல்பாகவே 1983 கறுப்பு யூலையை மீள நினைவூட்டியது. பாதிக்கப்பட்ட மக்களோ, தனித்து விடப்பட்டனர். சமூகம் சார்ந்த கோபங்கள், எதையும் செய்ய முடியாது முடங்கிக் கிடந்தது. சமவுரிமை இயக்கம் இந்த அசாதாரணமான இனவாதச் சூழலையும், உறைந்து கிடந்த அமைதியைத் தகர்க்கும் வண்ணமும், அதை வீதிக்கு கொண்டு வந்து போராடத் தொடங்கியது. மீண்டும் ஒரு கறுப்பு யூலை வேண்டாம்! என்ற கோசத்தை முன்வைத்து, அரசுக்கு எதிராகப் போராடத் தொடங்கியது. வரலாற்றுரீதியான இந்தத் துணிச்சல்மிக்க அரசியல் முன்னெடுப்பு, புலம்பெயர் நாடுகள் வரை முன்னெடுக்கப்பட்டது. அதேநேரம் நாடு தளுவியரீதியில், இனவாதத்துக்கு எதிரான தொடர் போராட்டமாக அதை மாற்றி, இன-மத ஒடுக்குமுறைக்கு எதிராக மக்களை விழிப்புணர்வூட்டி வருகின்றது.

மீண்டும் ஒரு கறுப்பு யூலை வேண்டாம்! என்ற கோசத்தை முன்வைக்கும்போது, 1983 கறுப்பு யூலையை எப்படிப் புரிந்து கொண்டுள்ளோம் என்ற இனவாதம் சார்ந்த பொது புரிதலைக் கடந்து முன்னிறுத்துகின்றது. அது எல்லாவகையான இனவாதத்தையும் வெட்டிச் சாய்க்கக் கோருகின்றது.

**மீண்டும் ஒரு கறுப்பு யூலையை ஏன் அரசு நடத்த முனைகின்றது.**

நீண்ட இனவாத யுத்தம் 2009 முடிவுற்ற பின்னான இலங்கை நிலைமையானது, இனவாதிகளுக்கும் ஆளும் வர்க்கத்துக்கும் மகிழ்ச்சியற்ற ஒன்றாக மாறியுள்ளது. மக்கள் ஐக்கியத்துடன் வாழ முற்படுதலும், ஒன்றுகலத்தலும் அதிகரித்து வருகின்றது. பிளவுவாதமும், பிரிவினைவாதமும் பின்தள்ளப்படும் அரசியல் முன்னுக்கு வருகின்றது. தமிழ் - சிங்கள மொழி பேசும் மக்கள், மொழி கடந்து தம்மை உழைக்கும் மக்களாக அடையாளப்படுத்துவதும்,அதையொட்டிய அரசியல் இயக்கங்களும் தவிர்க்க முடியாததாகி வருகின்றது.

இதைத் தடுத்து நிறுத்துவதற்காக அரசு திட்டமிட்டு "மீண்டும் கறுப்பு ஜூலையை" நடத்த முனைகின்றது. அரசு ஆதரவுடன் நடந்தேறுகின்ற இந்த இனச் செயற்பாடானது, மக்கள் ஐக்கியத்துடன் வாழ முனைவதையும், கூடி உண்டு வாழ்வதை தடுத்து நிறுத்துவது தான். மக்கள் ஒன்றிணைவது, இனவாதிகள் முனைப்புடன் "கறுப்பு ஜூலையை" மறுபடியும் நடத்த முனைய, மறுபக்கத்தில் குறுகிய இன-மத வன்முறை நடத்தப்பட்டது. 1983 கறுப்பு ஜூலையில் இது போன்று நடந்தது கிடையாது. ஆனால் அவை அதன் பின்பாகவே நடந்தேறியது.

இன்று பதிலுக்கு பதிலான உடனடியான வன்முறையானது மிகமிக ஆபத்தானது. இன-மத ரீதியான, குறுகியதும் தீவிரமான மக்கள் விரோதத் தன்மையுமாயும், இன-மத வாதம் நிறுவன வடிவம் பெற்று மக்களுக்கு எதிராக இருப்பதையே எடுத்துக் காட்டுகின்றது. இன-மத வன்முறையானது ஒரு இனம்-மதம் சார்ந்து அரசு ஆதரவுடன் மட்டும் நிறுவனப்பட்டு இருக்கவில்லை, மாறாக எல்லா இன-மதம் சார்ந்து இருப்பதையும், அவை சந்தர்ப்பத்துக்காக காத்துக் கிடப்பதையும் இன்று வெளிப்படுத்துகின்றது.

"மீண்டும் கறுப்பு ஜூலை வேண்டாம்" என்று கூறும் போது, இந்தக் கோசத்தின் பொது உள்ளடக்கத்தை, அதன் வரலாற்று வழியில் அனைத்து வகையான இன-மதவாதத்தையும் உள்ளடக்கி அதை மறுதலிக்க வேண்டியுள்ளது.

**1983 கறுப்பு யூலை செய்தது என்ன?**

1983 கறுப்பு யூலையானது வெறும் மரணங்கள்,

# மீண்டும் ஒரு கறுப்பு ஜூலை வேண்டாம்!












கேள்வியும், மக்கள் சார்ந்த பொதுவான சமூகப் புரிதல் இருக்கின்றதா என்ற கேள்வியும் இயல்பாக எழுகின்றது?

1983 "கறுப்பு ஜூலை" மூலம் சிங்கள - தமிழ் மொழி பேசும் மக்களை அரசு பிளந்தது. மறுபக்கத்தில் அரசின் இந்த பிளவுவாதத்தை, குறுந்தேசியம் பிரிவினையாக குறுக்கியது. இதன் மூலம் இனரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களை, மேலும் தன்னைத்தான் ஒடுக்குகின்ற இன எழுச்சியின் அங்கமாகவே "கறுப்பு ஜூலையை" முன்னிறுத்தியது. "கறுப்பு ஜூலைக்கு" பிந்தைய புரிதல் மற்றும் விளைவு இதுவாகும்.

கறுப்பு ஜூலை மூலம் நடந்தேறிய பிளவுவாதத்தையும், பிரிவினைவாதத்தையும் கடந்து மக்களின் ஒன்றுபட்ட வாழ்வுக்கு வித்திடப்படவில்லை. மாறாக மக்களை எல்லா வழியிலும் அடிமைப்படுத்தி ஒடுக்கியதே எமது வரலாறாகிப் போனது.

இனவாதிகளின் இந்த துர்நடத்தையின் விளைவுகளை மட்டும் கூறி, தொடர்ந்தும் மக்களை பிளக்கின்ற "கறுப்பு ஜூலை"யாக்கினர். அதாவது கறுப்பு ஜூலையை ஏற்றுக்கொள்ளாத மக்களின் குரலை முன்னிறுத்தி, அரசியலை முன்னெடுத்தது கிடையாது.

மீண்டும் ஒரு கறுப்பு ஜூலை வேண்டாம்! என்று சமவுரிமை இயக்கம் கூறும் போது, இன்றைய

இனவாதிகளுக்கும் அது சார்ந்த ஆளும் வர்க்கத்துக்கும் கலக்கத்தைக் கொடுக்கின்றது. மக்களைப் பிரிக்க விரும்புகின்ற அனைத்து இனவாதிகளின் பொதுவான தெரிவு தான், இனதுரோகத்தை எந்த வகையிலாவது ஏற்படுத்துவது.

எல்லா இனவாதிகளும் விதிவிலக்கின்றி இதையே நாடுகின்றனர்.

அளுத்தகம - பேருவளையை அண்டிய பகுதிகளின் முஸ்லிம் மக்கள் மேல் அரசு ஆதரவு பெற்ற இனவாதம் மட்டும் நடந்தேறவில்லை, முஸ்லிம் இன-மதவாதமும் கூட நடந்தேறியது. அளுத்தகம - பேருவளை முஸ்லிம் மக்கள் மேலான இன-மத வன்முறை ஒரு தாய் மக்களாக கூடி வாழ்ந்த அந்தப் பகுதி சிங்கள மக்களால் நடத்தப்படவில்லை. மாறாக திட்டமிட்டு வெளியிலிருந்து கொண்டு வரப்பட்ட காடையர்களால் நடத்தப்பட்டது. அதேநேரம் அந்தப் பகுதி மக்கள் வன்முறைகளில் பங்கு கொள்ள மறுத்து, தங்களளவில் எதிர்த்தும் நின்றனர்.

மறுபுறமாக அந்த கடற்கரைப் பகுதியில் இருந்த 46 சிங்கள வீடுகள் திட்டமிட்ட முறையில், உள்ளூர் முஸ்லிம் இன-மதவாதிகளால் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவமும் அங்கு நடந்தேறியது. இது வெளியில் இருந்த வந்த சிங்கள இன-மத காடையர்களுக்கு எதிரான தற்காப்புமல்ல, மாறாக இந்த வன்முறையில் எந்தவிதத்திலும் சம்பந்தப்படாத ஏழை மீனவர்கள் மீதான, முஸ்லிம் இன-மதவாதிகளால் நடத்தப்பட்ட வன்முறை. எப்படி அப்பாவி முஸ்லிம் மக்கள் தாக்கப்பட்டனரோ, அதே போன்ற மற்றொரு சம்பவமே இதுவும்.

இந்த இரு வேறான ஒரேவிதமான இன-மத ரீதியான வன்முறை சம்பவத்தை அங்கீகரிக்கவோ, நியாயப்படுத்தவோ முடியாது. ஒருபக்கம் ஆளும் வர்க்கத்தின் துணையுடன் அரச ஆதரவு பெற்ற

சொத்து அழிப்புகள், இனவழிப்புகளல்ல. அதாவது பாதிப்பு சார்ந்த விளைவுகள் மட்டும் அல்ல. மாறாக இன ஐக்கியத்துடன் இணைந்து வாழ்ந்த, மானிடத் தன்மைக்கு நடந்த கொடூரத்தையும் கொடுமையையும் பற்றியதாகும். ஆளும் வர்க்கங்கள் மக்களை இனரீதியாக பிரித்துக் கொண்டாடிய கொண்டாட்டமே கறுப்பு யூலை. இதன் மூலம் தமிழ் மக்களை சிங்கள மக்கள் மத்தியில் இருந்து பிரித்தனர். இந்த உண்மையை பாதுகாத்து நியாயப்படுத்துவதா? கறுப்பு ஜூலையைப் பற்றிய எமது சிந்தனைகள்! செயற்பாடுகள்!!

கறுப்பு ஜூலையை முன்னிறுத்தி மக்கள் கோருவதானது, கறுப்பு ஜூலைக்கு முன்பு சேர்ந்து வாழ்ந்த இன ஐக்கியத்தையே. ஆனால் இனவாதிகளோ கறுப்பு ஜூலைக்கு பிந்திய இனப் பிளவையும், பிரிவினையையும் கோருகின்றனர். இப்படி கறுப்பு யூலை குறித்து மக்கள் ஒருவிதமாகவும், இனவாதிகள் வேறுவிதமாகவும், அதாவது ஒன்றுக்கொன்று எதிராகவுமே அணுகுகின்றனர்.

உதாரணமாக 2000 ஆண்டு தொடங்கிய சமாதானப் பேச்சுவார்த்தையை முறித்து யுத்தத்தை மீள தொடங்கிய போது, மக்கள் அதற்கு எதிராக இருந்தனர். ஆனால் இனவாதிகளோ யுத்தத்தை மக்கள் மேல் திணித்தனர். இதையொத்ததாகவே கறுப்பு ஜூலையை ஒட்டிய நடத்தைகளும், செயற்பாடுகளும் கூட காணப்படுகின்றது.

இந்த வகையில் மீண்டும் கறுப்பு ஜூலையை நடத்த முனையும் இனவாதிகளுக்கு எதிராக, "மீண்டும் கறுப்பு யூலை வேண்டாம்" என்பதே மக்களின் உள்ளக்குமுறல். அதை சமவுரிமை இயக்கம் தனது அரசியல் கோசமாக்கி நடைமுறைப் போராட்டமாக்கியது.

1983 கறுப்பு யூலை மக்களின் ஒற்றுமையை, இணங்கி வாழ்ந்த வாழ்வை, ஒன்றுகலந்து வந்த

14 ஆம் பக்கம் பார்க்க...

15ஆம் பக்கம்

## மீண்டும் ஒரு கறுப்பு

மானிட செயற்பாட்டைத் தடுத்து நிறுத்தியது. இதை எப்படி எந்த வழியில் மீளக் கட்டியெழுப்புவது என்பதே மானிடர்களின் மேல் அக்கறையுள்ளவர்கள் முன்னுள்ள கேள்வியாக இருந்தது. சமவுரிமை இயக்கம் சமவுரிமைக்கு போராடுவதன் மூலம், மீண்டும் மானிட ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முனைகின்றது. அதேநேரம் இன வன்முறை நடக்கும் போது மீண்டும் ஒரு கறுப்பு ஜூலை வேண்டாம்! என்பதன் மூலமே, மானிடத் தன்மையை கோரிப் போராட முனைகின்றது. இதற்கு மாறாக, இந்த மனிதவிரோதச் செயலை தடுத்து நிறுத்த வேறு குறுக்கு வழி கிடையாது.

இனவாதிகளல்லாத உழைக்கும் மக்கள் 1983க்கு முன் எப்படிக் கூடி வாழ்ந்தார்கள் என்பது பற்றியோ, நடந்த இன வன்முறையின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு எப்படி தம்மளவில் உதவினார்கள் என்பது பற்றியோ, இன்று வரை அரசியல் ரீதியாக யாரும் அக்கறைப்பட்டது கிடையாது. இதை முன்னிறுத்தி இன ஐக்கியத்தை மீளக் கட்டியெழுப்ப யாரும் ஜூலையை நினைவு கொள்வது கிடையாது.

"மீண்டும் கறுப்பு ஜூலை வேண்டாம்" என்று சமவுரிமை இயக்கம் முன்வைக்கும் கோசமும், நடைமுறையும், மக்களின் ஐக்கியத்தையும் கூடி வாழ்கின்ற மானிடத் தன்மையை மீண்டும் பிரிக்காதே என்பதுதான். இதன் மூலம் மீண்டும் ஒன்றுபட்ட வாழ்வை கட்டியமைப்பதுதான். 1983 இல் இனவாதத்துக்கு எதிராக சாதாரண மக்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியது போல், இன்று இனவாதத்துக்கு எதிராக அமைப்பு ரீதியாக சமவுரிமை இயக்கம் மக்களை திரட்டிப் போராடுகின்றது. வரலாற்று படிப்பினையை மக்கள் சார்ந்ததாக மாற்ற முனைகின்றது.

1983 கறுப்பு யூலை இலங்கையில் மக்கள் இணங்கி இணைந்து வாழ்ந்த வரலாற்றையே மாற்றியமைத்தது. அரசு ஆதரவுடன் மக்களைப் பிரிக்க நடந்த இன வன்முறையானது, பல நூற்றுக்கணக்கில் மக்களைப் படுகொலை செய்தது. சிறைக்கைதிகள் முதல் சிங்கள மக்களுடன் இணைந்து வாழ்ந்த தமிழ் மக்களை, தமிழன் என்ற ஒரே காரணத்தினால் அவர்கள் மீதான வன்முறையை நடத்த முடிந்தது.

இதன் மூலம் மற்றைய இனங்களுடன் ஒன்றுகலந்து கூடி வாழ்ந்தவர்களை, இன ரீதியாக பிரித்து, வடக்கு - கிழக்கு நோக்கிச் செல்லுமாறு துரத்தி அடிக்க முடிந்தது.

அதேநேரம் கறுப்பு ஜூலை மூலம் தமிழ் மக்கள் சார்ந்த போராட்டம் வளர்ந்துவிடாது தடுக்க, இந்தியா தலையிட்டது. பயிற்சியையும், ஆயுதத்தையும், பணத்தையும் கொடுத்து கூலிப்பட்டாளத்தை உருவாக்கி, தனக்கான பின்தளத்தை உருவாக்கியது. மக்களை வெறுப்பது, மக்களை ஒடுக்குவது, அதிகாரத்தை மக்கள் மேல் நிறுவுவது, மக்களை நேசிப்பவர்களைக் கொல்வதையே, தன் கூலிப்படைகளின் அரசியலாக்கியது. கறுப்பு ஜூலையை பாதிக்கப்பட்ட மக்களை ஒடுக்குகின்ற, சொந்த எழுச்சியாக மாற்றி அமைத்தது.

கறுப்பு ஜூலை பாரிய இன யுத்தத்துக்கும், பிராந்திய நலன் சார்ந்த தலையீட்டுக்கும், சர்வதேச நாடுகளின் வேட்டைக்கும் இட்டுச் சென்றது. பலபத்துக் கூலிக் கும்பல்களை உருவாக்கியது. ஒட்டுமொத்தத்தில் மக்கள்விரோத யுத்தத்துக்கும், சமூக அழிவுக்கும் இட்டுச் சென்றது. ஒட்டுமொத்த மக்களின் வாழ்க்கையையே அழித்து, அவர்களை சின்னாபின்னமாக்கிவிட்டது. சில இலட்சம் மக்களை நாட்டை விட்டே துரத்தி அடித்தது. ஒன்றிணைந்த சமுதாய மாற்றத்தை தடுத்து நிறுத்தி, வீங்கி வெம்பிய இன குரோதத்தையும் இன வக்கிரத்தையும் புகுத்தியது.

ஒரு இனத்தின் மேல் நடந்த கொடுமையான, கொடூரமான செயலுக்காக எந்தச் சட்டமும் யாரையும் தண்டிக்கவில்லை. குற்றவாளிக் கூண்டில் யாரையும் முன்னிறுத்தவில்லை. இப்படிக் குற்றவாளிகளும், கொலைகாரர்களும் நடத்தும் இனவாத ஆட்சிதான், இன்று வரை நாட்டின் "ஜனநாயக" ஆட்சியாகவுள்ளது.

இதே போன்று 2009 இல் முள்ளிவாய்க்காலில் நடத்திய படுகொலைகள் கூட, சட்டத்தின் ஆட்சிக்கு உட்பட்ட நீதி விசாரணைக்கு உள்ளாகியதில்லை. இலங்கையின் சட்ட ஆட்சிக்குள் ஒரு நீதியைக் கோரவோ, பெறவோ முடியாதுள்ளது.

இனப் படுகொலைகள், கொள்ளைகள், வன்புனர்ச்சிகள், பொருளாதார அழிப்புகள், நிலச் சூறையாடல், இனவழிப்புகள் என்பது தமிழ் மக்களின் கடந்தகால வாழ்வு என்றால், அதுதான் இன்றுவரையான அழிக்க முடியாத வரலாறாகத் தொடருகின்றது.

ஒட்டுமொத்தமாக மக்களை நீண்டகாலமாக இனரீதியாக பிரித்து வைத்திருக்க முடிந்தது. இதனால் எல்லா இனம் சார்ந்த இனவாதிகளுக்கும் மகிழ்ச்சிக்குரியதாக, "கறுப்பு ஜூலை" மாறியது. இன ஐக்கியத்துக்கு பதில் பிரிவையும், பிளவையும் முன்வைத்தது. கூடியுழைத்து உண்டு வாழ்ந்த மக்களை, நிரந்தரமாக பிரித்து விடுகின்ற குறுகிய இனவாதமாக "கறுப்பு யூலையை" மாற்றி கொண்டாடியது, கொண்டாடுவதுமாக தொடர்ந்தது. அதன் தொடர்ச்சியாக மீண்டும் அளுத்கமை - பேருவளையில் "கறுப்பு ஜூலையை" நடத்த முனைந்தது.

இந்த நிகழ்வானது மீண்டும் இன காட்டுமிராண்டித்தனத்தை சமூகத்தில் விதைக்க முனைகின்றது. மனிதனை மனிதன் கொன்று, மற்றவனை வெறுக்குமாறு கற்பிக்க முனைகின்றது. இதை தடுத்து நிறுத்துவதே எம்முன்னுள்ள வரலாற்றுக் கடமை. ஐக்கியத்துடன், ஒன்றுகலந்து வாழும் மானிடத் தன்மையை கட்டியெழுப்புவதும், அதற்காக போராடுவதுமே மானிடத்தில் அக்கறையுள்ளவர்களின் ஒரேயொரு செயலாக இருக்க முடியும். மீண்டும் ஒரு கறுப்பு ஜூலை வேண்டாம்! என்று முன்வைத்து அணிதிரள்வதும், அணிதிரட்டிப் போராடுகின்றதுமான வரலாற்றுப் பாதையில் பயணிப்பது தவிர்க்க முடியாதாகியுள்ளது. இதையே மானிட வரலாறு அனைவரிடமும் கோரியும் நிற்கின்றது.

5ஆம் பக்கம்

### தன்னலத்தைத்

அதை முதன்மையாகக் கொண்டதே மனித உறவுகளாகி வருகின்றது. நுகர்வை அடைவதை நோக்கிய மனித உந்துதலாக, அவை மனித அறங்களாகி வருகின்றது. இதற்கமைவான தனிவுடமைச் சட்டங்களையே மனித வரம்புகளாக்கிக் கொள்கின்றது. சுயநலம் அராஜகமாக மாறிவிடாது சட்டங்களும், சட்டங்கள் மூலம் சுயநலத்தின் உச்சத்தை சிலர் அடையவும் வைக்கின்றது.

கூட்டு உழைப்புடனான வாழ்வு உருவாக்கிய அனைவருக்குமான சுயமான பொது சமூக ஒழுங்குக்கு பதில், தனிவுடமையிலான தனி உழைப்பு சார்ந்த சுயநலம் கொண்ட வாழ்வு முறையானது, சட்டவகைப்பட்ட சிறையை உருவாக்கி இருக்கின்றது. சட்டவகைப்பட்ட வாழ்க்கை முறையானது, சமூக உணர்வாக்கம் கொண்ட மற்றவர்களுடன் இணைந்து வாழும் வாழ்க்கை முறைமை இல்லாது போனதையே எடுத்துக் காட்டுகின்றது.

அழுகிப் போன இந்த சமூக அமைப்பினுள் ஆணின் சுயநலத்தைப் போல் பெண்ணையும் வாழத் தூண்டுகின்றது. தாழ்ந்த சாதிகள் உயர் சாதி போல் வக்கிரமடைய கோருகின்றது. ஏழைகள் பணக்காரனாக மாறுவதை நோக்கி கனவு காண வைக்கின்றது. கூலிகள் தன்னை மேய்க்கும் அதிகாரியாக மாறுவதை இலக்காகக் கொள்ளுமாறு கோருகின்றது. இப்படி தனிவுடமை அமைப்பில் உள்ளடக்கமான, மனிதனை மனிதனுக்கு எதிராக நிறுத்தி அதில் மற்றைய மனிதனை விட "உயர்வானவனாக", அதை அடைவதை முன்னோக்காக கொள்ளுமாறு கோருகின்றது.

இந்த வகையில் ஆண் போன்று ஆணாதிக்க மயமாக்குவதே பெண்விடுதலை என்று கருதுமளவுக்கு, பெண் தனிவுடமை கண்ணோட்டத்தை அடைதல் நடந்தேறுகின்றது. உயர் சாதி போல் சாதியாக்கம் பெறுவதே, தாழ்ந்த சாதிகளின் விடுதலை என்று கருதுமளவுக்கு தாழ்ந்த சாதிகள் தனிவுடமைக் கண்ணோட்டதைப் பெற்று வருகின்றனர். இப்படி அனைத்தும் இந்த அமைப்பில் எது "உயர்வானது" என்று தனிவுடமை வரையறுக்கின்றதோ, அதை அடைவதையே நோக்கிய மனித விழிப்பாக குறுகிய "குண்டுச் சட்டிக்குள்" சுற்றி வர வைக்கின்றது.

உழையாது வாழ்தல், மற்றவனை ஒடுக்குவது, அதிகாரம் செய்வது, சொத்தைக் குவிப்பது...என இவற்றை "உயர்வானதாகக்" காட்டுகின்றது. இதை பொது இலட்சியமாக முன்னிறுத்தி, அடைவதை தூண்டுகின்றது. இதற்கு தடையானதை "ஜனநாயக" மறுப்பாகவும் தனிமனித "சுதந்திரத்துக்கு" எதிரானதாகவும், "தனிமனித" உரிமை மீறலாகவும் காட்டுகின்றது.

தனிவுடமை முன்வைக்கும் "ஜனநாயகமும் - சுதந்திரமும் - மனிதவுரிமை" யும் அனைவருக்கும் இருக்குமாயின், இந்தச் சொற்களுக்குரிய பொருள் அர்த்தம் இழந்துவிடும். அதாவது தனிவுடமை அமைப்பே தகர்ந்துவிடும். தனிவுடமை அமைப்பு முறையின் சாரமானது, "ஜனநாயகத்தை" "சுதந்திரத்தை" "மனிதவுரிமையை" மற்றவனுக்கு மறுப்பதன் மூலம், தன்னை முதன்மையாக்குவதாகும். இவற்றையெல்லாம் "ஜனநாயகத்தை" "சுதந்திரத்தை" "மனிதவுரிமையை" கோரி அவற்றையெல்லாம் தனக்கானதாக மட்டுமே குறுக்கும் போது, சமூகத் தன்மையை இழப்பதாகி விடுகின்றது.

தனிமனித வேட்கையாக, தன்னை முதன்மைப்படுத்தி தன்னைச் சுற்றிய அனைத்தையும் முரண்பாடாக்குகின்றது. தன் குழந்தை, தாய், தந்தை, உற்றார், சமூகம் என்ற அனைத்தையும் தனக்கு எதிராக மாற்றுகின்றது. தனக்கு தடையாக மனித உறவுகளை கருதுகின்றது. இந்த மாற்றம் என்பது தனிப்பட்ட மனிதர்களின் சொந்த தெரிவுமல்ல, மனிதக் கூறுமல்ல. மாறாக சமூகச் சிதைவானது, தனிவுடமை அமைப்பு முன்தள்ளும் நுகர்வாக்கத்தின் பொது விளைவாகும். இந்த நுகர்வாக்க தனிவுடமைக்கு பதில் தேவையை அடிப்படையாகக் கொண்ட பொதுவுடமையை முதன்மைப்படுத்தி, கூட்டு உழைப்பு சார்ந்த எதார்த்த வாழ்வை மீட்டு எடுப்பதே இதற்கான தீர்வாகும்.

11ஆம் பக்கம்

### புலிகள், தென் ஆபிரிக்கா, மஹிந்த அரசு ...

தென் - ஆபிரிக்காவில் நிலைகொண்டிருந்த போராளிகளையும், மூதலீடு செய்யப்பட்ட பணத்தையும் கைப்பற்ற கோத்தபாய முன்னெடுத்த முயற்சி செய்யும்வரை தொடர்ந்தது. கோத்தபாயவின் முயற்சி தோல்வி கண்டதற்கு, அருட்திரு. இம்மானுவேல் அடிகளார் சார்ந்த வலையமைப்பும்,நோர்வே போன்ற நாடுகளின் தலையீடும் இன்றியமையாதவையாகும். இந்நிகழ்வும், சர்வதேசச் சட்டங்களை முன்னிறுத்தி நெடியவனைக் கைது செய்ய இலங்கை அரசினால் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் காரணமாகவும், நெடியவன் குழு பாதிரியார் அருட்திரு. இம்மானுவேல் அடிகளார் மற்றும் டீவுகு, புவுகு உடன் சமரசம் செய்து கொண்டது. அத்துடன் ஐக்கியநாடுகள் சபையின் விசாரணையை மட்டும் நம்பி இருக்காமல், தென் - ஆபிரிக்க முறையிலான பொறிமுறைக் கோரலுக்கும் ஆதரவு தெரிவித்தது.

இனி நடக்கப்போவது

இவ்வாறு மஹிந்த அரசினதும் மற்றும் புலிகளின் புலம்பெயர் அமைப்புகளின், தேவைகள்,அரசியற்- பொருளாதார இருப்புகள் அனைத்தும் தென் - ஆபிரிக்கா என்ற புள்ளியில் சங்கமித்தது.

முன்பு இதே நிலை 90-களின் இறுதியில் ஏற்பட்டபோது புலிகளுக்கும், அன்றிருந்த சந்திரிகா அரசுக்கும் இடையில் தரகு பார்க்க நோர்வே முன் வந்தது. இன்று நிலைமைகள் வேறாக இருந்தாலும் - போர் இல்லாவிட்டாலும் சர்வதேச சூழ்நிலையும், இலங்கையின் உள்நாட்டு நிலவரமும் மேற்படி இருபகுதியினரும் தமது நலனை முன்னிறுத்தி தென் - ஆபிரிக்க அரசு ஊடாக பேச முன் வந்துள்ளனர்.

பகிரங்கமான அரசியல் பேச்சுவார்த்தைகள் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் மஹிந்த அரசுக்கும் இடையில் நடக்கவிருந்தாலும், கதவுக்குப் பின்னால் புலம்பெயர் புலிகளின் அமைப்புகளும் -குறிப்பாக நெடியவன் தலைமையிலான குழுவும் பேச்சுகளில் பங்குகொள்ளுமென்பதிற் சந்தேமில்லை. அக் கதவுக்குப் பின்னாலான பேச்சுக்களில் கோத்தபாய மஹிந்த அரசின் சார்பில் காய் நகர்த்துவார் என்பதிலும் சந்தேகமில்லை. இந்த வகையில், சில இணக்கப்பாடுகள் இருதரப்பினருக்கும் இடையில் ஏற்கனவே எட்டப்பட்டுள்ள நிலையில்,வெளிப்படையான பேச்சுகளைத் தொடங்குவதற்கான சம்பிரதாயபூர்வமான நிகழ்வே கடந்த மாதம் நடைபெற்ற தென் - ஆபிரிக்க உப ஜனாதிபதி சிறில் ராமபோசாவின் வருகையாகும்.

தமிழ் பேசும் மக்களும், இலங்கையில் அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களும் கடந்த அறுபது வருடங்களிற் பல பேச்சுவார்த்தைகளையும், ஒப்பந்தங்களையும் கண்கொண்டு பார்த்து விட்டனர். இது வரை மக்கள் நலனைப் பூர்த்திசெய்யக் கூடிய எந்தவித பயனும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. எல்லாம் ஆதிக்க சக்திகளின் நலனையும், இனவாத, மதவாத வெறியர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யவே முன்னெடுக்கப்பட்டவை. அவ்வாறான பேச்சுகளின் வரிசையில் ஒன்றுதான் தென் - ஆபிரிக்கத் தரகுடன் நடக்கப் போகிறது. எனவே ஒடுக்கப்பட்ட தேசிய இனமக்கள் இப் பேச்சுகளில் நம்பிக்கை கொண்டு ஏமாறாமல் தொடர்ந்தும் போராடித் தமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டும்.





“இன்னும் சிலர் அரசன் என்பவன் கடவுளுக்கு சமமானவன் அரசன் கூறுவது, நிகழ்வது எல்லாம் கடவுளின் அருளாகும் எனவே அரசனை விசுவாசியுங்கள் எனக் கூறினார்கள். மக்கள் நீண்டநேரம் வேலைசெய்கிறார்கள், உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி பஞ்சம், பசி, பட்டினியுடன் வாழ்கிறர்கள் அரசனும், முதலாளிகளும், பிரபுக்களும், உயர்அரச அதிகாரிகளும் சுகபோகமாக வாழ்கிறார்கள். இது ஏன் இது கடவுளின் செயலா?”

# இனி ஒரு விதிசெய்வோம் மக்கள் பிரச்சினைக்கு தீர்வு காண்போம்!

ஆதிகாலமனிதன் காடுகளில் குழுக்களாக வாழ்ந்தகாலத்தில் பூரணசுதந்திரம் பெற்ற மனிதனாக வாழ்ந்தான். அவனை யாரும் ஆட்சிசெய்யவுமில்லை, அவனுக்கென எதுவுமே சொந்தமாக இருக்க வில்லை. காடுகள், மலைகள், ஆறுகள், காய் கனிகள், காட்டு மிருகங்கள் அனைத்துமே அந்த குழுக்களுக்கு பொதுவாக இருந்தது. காலவோட்டத்தில் வேற்று மனிதகுழுக்கள் அந்த காட்டை பங்குபோடத் தொடங்கியதும் இருகுழுக்களிடையிலும் மோதல் தொடங்கியது. ஒரு குழுவினர் மற்ற குழுவினரை முற்றாக அழித்தனர். வெற்றிபெற்ற குழுவினர் தோல்வியடைந்த குழுவினரை அடிமைகளாக்கிக் கொண்டனர். காலப்போக்கில் ெற்றிபெற்ற குழுவில் இருந்த பலசாலிகள் ஆழுமதகுதியை பெற்றனர். தோல்வியடைந்த குழுவினரை மட்டுமன்றி தமதுகுழுவினரையும் ஆளத்தொடங்கினர். இவ்வாறே ஆண்டான் அடிமை சமுதாயம் ஆரம்பித்தது.

காலத்தின் சுழற்சியில் கருவிகள் வளர்ச்சியடைய விவசாயம், மீன்பிடி, நெசவு போன்றவற்றின் வளர்ச்சியுடன் நிலமானிய சமுதாயம் ஆரம்பித்தது. பெரும் நிலபிரபுக்களும், அரசர்களும் உருவாகி ஆட்சிபுரிய ஆரம்பித்தார்கள். இந்த ஆட்சி காலத்தில்தான் மக்கள் சொல்லொண்ணா துயரங்களுக்கு ஆளானார்கள். இந்த காலகட்டமதான் மனித வரலாற்றில் மிகநீண்ட காலகட்டமாக அமைந்தது.

கைத்தொழில் புரட்சியின் மூலமாக ஐரோப்பிய நாடுகளில் தொழில்துறை மிகவேகமாக வளர்ச்சியடையத் தொடங்கியதும், முதலாளி, தொழிலாளி எனபுதிய வர்க்கம் உருவாகியது. இங்கிலாந்து, பிரான்ஸ் முன்னணி நாடுகளாக வளர்ச்சிகண்டது. இந்த வளர்ச்ச காரணமாக பெரும் தொகையான தொழிலாளர்கள் உருவாகினர். இப்போது மனித சமுதாயம் முதலாளித்துவ சமுதாயத்துள் காலடி எடுத்து வைத்தது. மக்கள் நிலபிரபுத்துவ அடிமை குடிமை முறைமையில் இருந்து விடுபட்டு, கொஞ்சம் சிறிது சுதந்திரமுள்ள முதலாளித்துவ சமூகவாழ்க்கை வாழ தலைப்பட்டார்கள். நிலக்கரி சுரங்கங்களிலும், இயந்திரவியல் தொழிற்சாலைகளிலும், சிறுஉற்பத்தி தொழிற்சாலைகளிலும் தொழிலாளாகள் நாளொன்றுக்கு 16 மணித்தியாலங்கள் பணியாற்ற நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். உயிருக்கு பாதுகாப்பின்றியும், போதிய சுகாதார வசதிகளின்றியும், உழைப்புக்கேற்ற ஊதியம் இன்றியும், மிகமோசமான குடியிருப்புகளில் வாழவும் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். ஐரோப்பா முழுவதும் இந்தநிலையே காணப்பட்டது. அங்கெல்லாம் தொழிலாளர்களின் ஊர்வலங்களும், ஆர்ப்பாட்டங்களும், வேலைநிறுத்தங்களும் தினசரி இடம்பெற்றுவந்தன.

இந்த நெருக்கடியின் மத்தியில் 1848 பெப்ரவரியில் பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் பாட்டாளிவர்க்க புரட்சி வெடித்தது. மன்னன் பிலிப் புரட்சியை அடக்க படைகளை ஏவினான். படைகள் தொழிலாள வர்க்கத்தின் பக்கம் சாய்ததுடன் மாணவாகளும் தொழிலாள வர்க்கத்துக்கு ஆதரவு கொடுத்தனர். பாரிஸ் தொழிலாளர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அரசன் நாட்டை விட்டு ஓடினான். தொழிலாளர் குடியரசு பிரகடனம் செய்தனர். இதையே “பாரிஸ் கம்யூன் புரட்சி” என அழைக்கப்படுகிறது. இதுவே தொழிலாளவர்க்கத்தின் முதலாவது புரட்சியும் தொழிலாளவர்க்கத்தின் தலைமையிலான குடியரசுமாகும்.





இதனை அறிந்த உலக மக்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர். ஏனைய ஐரோப்பிய நாடுகளின் தொழிலாளர், விவசாயிகள் ஒடுக்கப்பட்ட மக்கள் தமது நாட்டு மன்னர்களையும் துரத்திவிட்டு குடியரசை பிரகடனம் செய்ய பெரும்போராட்டங்களை ஆரம்பித்தனர். விழிப்படைந்த மன்னர்கள், முதலாளிகள், அரச அதிகாரிகள், ராணுவஅதிகாரிகள், மதத்தலைவர்கள் மற்றும் ஏனைய பிற்போக்குவாதிகள் அண்மையிலிருந்த அரசாங்கங்களும் அவர்களின் ராணுவமும் இணைந்து பாரிஸ் கம்யூன் அரசை தோற்கடித்தார்கள். பாரிஸ் கம்யூன் புரட்சி தோற்கடிக்கப்பட்டாலும், அந்த புரட்சி ஐரோப்பிய தொழிலாள வர்க்கத்தி எழுச்சிக்கு உத்வேகத்தை கொடுத்தது.

இதன் தொடர்ச்சியாக அமெரிக்காவின் சிக்காகோ நகரில் 8மணித்தியால வேலைக்கான போராட்டம் தொடங்கியது. 16 மணி வேலை நேரத்தை நிராகரித்தும் சம்பளஉயர்வு கோரியும் அமெரிக்க பாட்டாளி வர்க்கம் பெரும் வேலைநிறுத்த போராட்டத்தை ஆரம்பித்தது. அதை அடக்க அமெரிக்க அரசு ராணுவத்தை ஏவியது. ராணுவம் துப்பாக்கி பிரயோகம் செய்ததில் சிலர் கொல்லப்பட்டார்கள் பலர் படுகாயமடைந்தனர், தலைவர்கள் சிலரை கைதுசெய்து உடனடியாக அவர்களை குற்றவாளிகள் என அறிவித்து அவர்களை தூக்கிலிட்டு கொலை செய்து அந்த போராட்டத்தை. அடக்கினார்கள். ஆனாலும் போராட்டம் சில நாடகளிலேயே உலகம்பூராவும் பரவி 8மணி வேலைநேர கோரிக்கை வானுயர எழுந்தது. உலக முதலாளிவர்க்கம் அந்த போராட்டத்தை கட்டுப்படுத்த 8மணி வேலைநேரத்தை ஏற்று செயல்படுத்தினார்கள். இந்த நாளையே நாம் “மேதினம்” என நினைவு கூருகிறோம்.

தொழிலாளர்கள் தமது போராட்டங்களினால் சில கோரிக்கைகளை வென்றெடுக்க முடியுமேதவிர தொழிலாள வர்க்க அரசு ஒன்றை ஸ்தாபிக்க முடியாது என அக்கால அறிஞர்கள், தத்துவவாதிகள், மதகுருமார்கள் அரசர்கள், மன்னர்கள் என எல்லோரும் கூறினார்கள். முதலாளித்துவ சமுதாயமே இறுதியான சமுதாயம் இது மாறாது மாற்றவும் முடியாது எனஅடித்துக்கூறினார்கள் எழுதித்தள்ளினார்கள், இன்னும் சிலர் அரசன் என்பவன் கடவுளுக்கு சமமானவன் அரசன் கூறுவது, நிகழ்வது எல்லாம் கடவுளின் அருளாகும் எனவே அரசனை விசுவாசியுங்கள் எனக் கூறினார்கள். மக்கள் நீண்டநேரம் வேலைசெய்கிறார்கள், உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி பஞ்சம், பசி, பட்டினியுடன் வாழ்கிறர்கள் அரசனும், முதலாளிகளும், பிரபுக்களும், உயர்அரச அதிகாரிகளும் சுகபோகமாக வாழ்கிறார்கள். இது ஏன் இது கடவுளின் செயலா?

மிகுதி அடுத்த இதழில்

போராட்டம்

41/32, கெந்தஹேனவத்தை, தெபானம, பன்னிபிட்டிய.
தொலைபேசி/தெலைநகல்: 094-113185692
mpssrilanka@gmail.com, http://www.peoplesstruggle.com

# மீண்டுமொரு கறுப்பு ஜூலை வேண்டாம்!

## புதிய திருப்பம்!

ஜூன் 15ஆம் திகதி அழுத்கம, தர்கா நகர், பேருவளை ஆகிய பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட இனவன்முறைகளை தற்செயலான சம்பவம்களாக கருதமுடியாது. ஏனெனில் மேற்படி சம்பவங்களை அடுத்து பாணந்துறை "நோலிமிட்" நிறுவனம் எரியூட்டப்பட்டமை கேகாலை மற்றும் வேறுசில பகுதிகளிலும் காணப்பட்ட பதட்டநிலை போன்ற சம்பவங்கள், 1983 கறுப்பு ஜூலையில் தமிழ் மக்களுக்கு எதிராக நாடுதழுவியரீதியில் திட்டமிடப்பட்டு கட்டவிள்த்து விடப்பட்ட இன வன்முறைகளை ஒத்ததாகவே காணப்பட்டது. ஆனாலும் முஸ்லிம்களுக்கு எதிரான இந்த கலவரத்தை கண்டித்து வன்முறையாளர்களால் மேலும் விரிவுபடுத்த முடியாதபடி தென்னிலங்கையில் பரவலாகவும், குறிப்பாக கொழும்பில் பெரும்பான்மையினத்தை சேர்ந்த புத்திஜீவிகள், சிவில்நிறுவனங்கள், சமூக ஆர்வலர்கள், முற்போக்கு அரசியல் கட்சிகள் என அனைவரும் ஒன்றுதிரண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர். அத்துடன் ஜூன்18ஆம் திகதி "சமஉரிமை இயக்கமும்" "முன்னணி சோசலிஸக் கட்சி"யும் இணைந்து அழுத்கம, பேருவள, தர்காநகர் ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற முஸ்லிம் மக்களுக்கு எதிரான இனக்கலவரத்தை கண்டித்து கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பதாக பாரிய ஏதிர்ப்பு பேரணி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர். இந்த பேரணியில் சிவில்சமூக பிரதிநிதிகள், முற்போக்கு அரசியல் கட்சிகளின் தலைவர்கள், புத்திஜீவிகள் மற்றும் இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் சமாதான சகவாழ்வை நேசிக்கும் பொதுமக்கள் என பெரும்தொகையானோர் கலந்துகொண்டு இனவாதத்திற்க்கு எதிராக குரல்கொடுத்தனர். அதேபோல் முஸ்லிம்கள் மத்தியிலான சமூகஅமைப்புகளை சார்ந்த முஸ்லிம் இளைஞர்கள் பெரும்பான்மை யின மக்களின் ஒத்துளைப்பின்றி இந்நாட்டில் இனவாத வன்முறைகளை தோற்கடிக்க முடியாது என்னும் கருத்தியலை இனவாதத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட கருத்தரங்குகளில் கலந்துகொண்டு வலியுறுத்தினர். இவ்வாறாக தற்போது நாட்டில் இனவாதத்திற்கு எதிராக தோற்றம்பெற்றுள்ள புரிந்துணர்வுடனான பாரிய அணிதிரள்வானது மீண்டுமொரு பாரிய இன,மதக்கலவரத்தை தோற்றுவிக்கும் முயற்சியை தோற்கடித்துள்ளது. இந்த நிலைமையானது இனவாதத்தை முன்னிறுத்தி அரசியல் பிழைப்பு நடாத்தும் அரசியல் பிழைப்பு வாதிகளுக்கும் இனவாத வன்முறைகளையே தொழிலாகக்கொண்ட காடையர்களுக்கும் சவாலாக மாறியுள்ளது. இது இலங்கை அரசியல் வரலாற்றில் ஏற்பட்டுள்ள புதிய திருப்பமாகும்,

தற்போது இனவாதிகளுக்கு இனவாதத்தை துாண்டிவிட வாய்ப்பாகக் காணப்படுவது தேசியஇனப்பிரச்சினைக்கான தீர்வு விவகாரமாகும். இந்த விவகாரத்தை தமிழ் தலைமைகள் இந்தியா, சர்வதேசம் என இழுத்தடித்து காலத்தை வீணடிப்பதற்குப் பதிலாக தென்னிலங்கை முற்போக்கு சக்திகளுடன் கலந்துரையாடி அவர்களுடைய ஒத்துழைப்புடன் நியாயமான அரசியல் தீர்வுக்கான போராட்டத்தில் ஈடுபடுவார்களானால் அது பொருத்தமான நடவடிக்கையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தற்போது நாட்டில் இனவாதத்திற்கு எதிராக எழுச்சி பெற்றிருக்கும் சூழலை தமிழர்தரப்பு தமக்கு சாதகமாக பயன்படுத்த முன்வருவார்களா?

பின்பற்றி இந்த நிலைமையை மேலும் மேலும் வளர்த்தெடுக்க வேண்டிய கடைப்பாடு அனைத்து சமூகங்களையும் சார்ந்த புத்திஜீவிகள் மற்றும் சிவில்நிறுவனங்களினதும் கடைப்பாடாகும்.


நுவரெலியா


பொலநறுவ

ஆட்சி செய்பவர்களின் முழுமையான ஒத்துழைப்போடு தீவிரவாத குழுக்கள் நாடு பூராவும் இனவாத மதவாத பிரச்சாரங்களை முன்னெடுத்து வரும் நிலையில், சம உரிமை இயக்கம் நாட்டு மக்களின் ஒற்றுமையை கருதி இனவாதத்திற்கும் மதவாதத்திற்கும் மற்றும் சகலவித குலவாதத்திற்கும் எதிராக மக்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. அதன் முக்கிய நடவடிக்கையானது மீண்டும் ஒரு கறுப்பு ஜூலை வேண்டாம் என்ற தொனிப்பொருளில் நாடு பூராவும் மேற்கொண்ட பெனர்' கையெழுத்து வேட்டையாகும். ஜூலை 23ம் திகதி நாட்டின் பல பகுதிகளில் நடந்த கையெழுத்து வேட்டையில் மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொள்வதை காணலாம்.


கொழும்பு கோட்டை


யாழ்பாணம்


இரத்தினபுரி



41/32, கெந்தஹேன வத்தை, தெபானம, பண்னிபிட்டிய் வசிக்கும் ஜுட் சில்வா புள்ளே ஆகிய என்னால் கடவத்தை, கோனஹேன பாதை, சத்தர்மதிலகாராம மாவத்தையில் அமைந்துள்ள ஸ்பெக்ட்ரா எட்வடைசிங் நிறுவனத்தில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.